Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JUNE 3, 2022

வெள்ளிக்கிழமை ஜூன் 03, 2022 | ஒளி: 08 கதிர்: 013 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE



# பரீட்சைகள் பிந்தின

■ பா.நிரோஸ்

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் இடம்பெறவிருந்த க.பொ.த உயர்தர மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளை ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

மேலும், பாடசாலை சீருடை விநியோகம் தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்த அமைச்சர், சீருடைகளை நன்கொடையாக பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



சர்வதேச நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ள

# தீவிர முயற்சியில் அரசாங்கம்

## சர்வதேசத்துடன் பல்வேறு இணக்கப்பாடுகளுக்கு அமைச்சரவை தயாராம்

■ ஆர்.யசி

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்கவும், உணவுப்பஞ்சத்தை தவிர்க்கும் விதமாகவும் பெரும்போகம், சிறுபோக விளைச்சலுக்கான உரத்தை பெற்றுக்கொள்ளவும் அரசாங்கம் சர்வதேச தரப்புடன் தீவிரமாகக் கலந்துயாடி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் சர்வதேச தரப்புடன் மேற்கொண்டுள்ள பேச்சுவார்த்தைகளில் பல்வேறு இணக்கப்பாடுகளை எட்டியேனும் உதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என பிரதமர் அமைச்சரவைக்கு அறிவுரை வழங்கியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2



## அநுரகுமார சீனத்தூதுவர் சந்திப்பு

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ சென்ஹொங்க்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று (02) ஜே.வி.பி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நிலைவரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், கட்சிகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

## பொலிஸ் அதிகாரிக்கு ஆபாச வசை பாடிய எம்.பியின் மகன்

தென் அதிவேக நெடுஞ்சாலையின் பெந்திகம மாற்றத்தில் வைத்து, பொலிஸ் அதிகாரியொருவரை ஆபாச வார்த்தைகளால் வசை பாடிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரொருவரின் மகன் குறித்து, பெலியத்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2




ஆறு மாதங்களுக்கு தேவையான

## உயிர்காக்கும் மருந்துகளை வழங்குகிறது சீனா

### முதல் தொகுதி இன்று வருகிறது

இலங்கையில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டை சமாளிக்கும் வகையில், ஆறு மாதங்களுக்குத் தேவையான 500 மில்லியன் யுவான் பெறுமதியான உயிர்காக்கும் மருந்துகளை இரண்டு கட்டங்களாக இலங்கைக்கு வழங்கவுள்ளதாக, கொழும்பிலுள்ள சீன தூதரகம், நேற்று (02) அறிவித்தது.

தொடர்ச்சி P2



## கச்சத்தீவை மீடக சரியான தருணம்

### தே.மு.தி.க கூட்டத்தில் தீர்மானம்

“இலங்கையிடம் இருந்து, கச்சத்தீவை மீட்டு எடுக்க சரியான தருணம். எனவே, மத்திய அரசுக்கு உரிய அழுத்தத்தைக் கொடுத்து, கச்சத்தீவை மீட்டெடுக்க வேண்டும்” என்று தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் (தே.மு.தி.க) மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் மாவட்டச் செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் கட்சியின் பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் சென்னை, கோயம்பேட்டில் உள்ள தலைமைக் கழகத்தில் நேற்று (02) நடைபெற்றது.

தொடர்ச்சி P2



21ஐ நிறைவேற்றுவதன் ஊடாக

## அரசியல் ஸ்திரத்தன்மையை ஓரளவேனும் உறுதிப்படுத்தலாம்

### அமெரிக்க தூதுவரிடத்தில் நீதி அமைச்சர் தெரிவிப்பு

■ ஆர்.யசி

உத்தேச 21ஆம் திருத்த சட்டத்தின் மூலமாக, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகளை எதிர்பார்க்க முடியாது. எனினும் அரசியல் ஸ்திரத்திரத்தன்மையை ஓரளவேனும் உறுதிப்படுத்த சாதகமாக அமையும் என, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலியிடத்தில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

தமிழக நிவாரணங்கள்

## முழு தோட்ட மக்களையும் சென்றடைய வேண்டும்

■ மகேஸ்வரி விஜயனந்தன்



கிராம உத்தியோகத்தர்களின் பட்டியலுக்கு அமைய, தோட்டப் புறங்களில் குறைந்த வருமானம் பெறுபவர்களின் பட்டியலில் தோட்டத் தொழிலாளர்கள் எவரும் உள்ளடக்கப்படமாட்டார்கள் எனத் தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான்,

தொடர்ச்சி P2

## பைத்தியத்தை நிரூபித்துவிட்டார்

### பிரதான எதிர்க்கட்சி விமர்சனம்

■ பா.நிரோஸ்

விவசாயத்துறையை நாசமாக்கியதன் ஊடாக, தனக்கு பைத்தியம் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிரூபித்துள்ளார். ஜனாதிபதிக்கு பைத்தியம் என மக்கள் கூறுவதற்கு இதனைவிட வேறெதுவும் உதாரணங்கள் அவசியமா என, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கேள்வியெழுப்பியுள்ளார்.

தொடர்ச்சி P2

மே 9 வன்முறை விவகாரம்:

## சீ.ஐ.டியில் சரணடைந்த கஹந்தகம கைதானார்



மே மாதம் 9 ஆம் திகதி கொழும்பில் உள்ள ‘கோட்டா கோ கம’, ‘மைனா கோ கம’ அமைதிப் போராட்டத் தளங்கள் மீதான தாக்குதல்கள் குறித்து, சந்தேக நபராக அறிவிக்கப்பட்ட கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மஹிந்த கஹந்தகம, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று (02) சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டார்.

தாக்குதல்கள் குறித்து, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மஹிந்த கஹந்தகம உட்பட மூவரை சந்தேகநபர்களாக பெயரிட்டுள்ளதாக சீ.ஐ.டியினர் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் (01) அறிவித்தனர்.

தொடர்ச்சி P2

சிறுபோகத்துக்கான உரங்களை

## இந்தியா வழங்க இணக்கம்

நாட்டின் சிறுபோகத்துக்கான உரங்களை விரைவில் வழங்குவதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இணக்கம் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்த உரமானது இந்திய கடனுதவியுடன் வழங்கப்படுவதுடன், இலங்கைக்குக் கிடைத்து 20 நாள்களுக்குள் விவசாயிகளுக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டு உள்ளதாக தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



ஹரீன் அங்கே; நான் இங்கே

## விளக்குகிறார் வடிவேல் சுரேஸ் எம்.பி

தொழிற்சங்கங்களின் கைகள் கட்டப்பட்டு உள்ளன எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்க அனாதைகளாக மாற்றப்பட்டுள்ளார்கள் என்றார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று (2) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மே 9 வன்முறை விவகாரம்:

## ஜனாதிபதியுடன் தென்னகோன் 11 நிமிடம் உரையாடினார்

### கோட்டை நீதவானுக்கு தென்னகோனின் சட்டத்தரணி அறிவிப்பு

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து தொலைபேசி அழைப்பை பெற்றதன் பின்னரே, கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் ஜனாதிபதிக்கும் தென்னகோனுக்கும் இடையே 11 நிமிட தொலைபேசி உரையாடல் இடம்பெற்றதாகவும், ஜனாதிபதி சட்டத்தரணி நளின் லட்டுவஹெட்டி, கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## 695 பில்லியன் ரூபாய் குறைநிரப்பு மதிப்பீடு புதனன்று விவாதம்

### பிரதமரின் விசேட அறிவிப்பு 07ஆம் திகதி



■ பா. நிரோஸ்

அத்தியாவசிய அரச சேவைகளைத் தடைகளின்றி தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 07ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள 695 பில்லியன் ரூபாய் குறைநிரப்பு மதிப்பீடு தொடர்பான விவாதத்தை எதிர்வரும் 7, 8ஆம் திகதிகளில் நடத்துவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# தீவிர முயற்சியில் அரசாங்கம்

இந்நிலையில் ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் இறுதியாக கூடிய அமைச்சரவை கூட்டத்தின் போதும், நாட்டின் நெருக்கடி நிலைமைகள் குறித்து பிரதமர் தெளிவுபடுத்தியுள்ளதுடன், நெருக்கடியை தவிர்க்க பல்வேறு மாற்று வேலைத்திட்டங்களை கையாள வேண்டியுள்ளதாவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னெடுக்கப்பட்டுவரும் பேச்சுவார்த்தைகளின் போதும் இலங்கையின் சார்பில் முன்வைக்கவுள்ள பரந்துபட்ட வேலைத்திட்டம் குறித்தும், பொது இணக்கப்பாடுகள் குறித்தும் உடனடியாக தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளதாகவும், தொழிநுட்ப பேச்சுவார்த்தையை அடுத்த வாரத்தில் இருந்து மீண்டும் ஆரம்பிக்க வேண்டியுள்ளதாகவும், இம்மாத இறுதிக்குள் பொது இணக்கப்பாடு ஒன்றினை எட்ட வேண்டும் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளதாக அமைச்சரவை வட்டாரங்களில் அறிய முடிகின்றது. நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க குறைந்தபட்சம் 3 தொடக்கம் 4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகவும், அதனை பெற்றுக்கொள்ள சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியாக வேண்டும் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளாராம். எனினும் தொழிநுட்ப பேச்சுவார்த்தைகள் முடிவியும் வரையில் இது குறித்து உறுதிப்படுத்த முடியாதுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இந்நிலையில் உணவுப்பஞ்சம் ஒன்றினை நாடு எதிர்கொண்டு வருகின்ற நிலையில் விவசாயத்தை உடனடியாக மீட்டெடுக்க தேவையான உர மானியங்களை உலக வங்கியிடமும், இந்தியாவிடமும் கோரியுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். குறிப்பாக பெரும்போகதிற்கு தேவையான யூரியா உரத்தினை வழங்க உலக வங்கி இணங்கியுள்ளதாகவும், சிறுபோகத்திற்கு தேவையான உரம் இந்தியாவில் இருந்து பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பரீட்சைகள் பிந்தின

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (02) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டுக்கான புதிய கல்வியாண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் பாடசாலை பாடத்திட்டங்களை முடிப்பதற்காக ஆசிரியர்களுக்கு அதிகபட்ச பாடசாலை நாட்களை வழங்குவதற்கு முயற்சிப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இது குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் 2023 ஆம் ஆண்டுக்கான புதிய தவணை ஆரம்பிக்கப்பட முன்னர், 2022 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை டிசெம்பர் 23 ஆம் திகதி வரை நடைபெற அதிக

**“ நிதியைப் பெறுவதற்கான அனைத்து மதிப்பீடுகளையும் தயார் செய்யப்பட்டுள்ளது.**

வாய்ப்புகள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

பாட மற்றும் பயிற்சிப் புத்தகங்களை அச்சிடுவதற்கான கடதாசிகள் மற்றும் பரீட்சைகள் திணைக்களத்துக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

திறைசேரியிலிருந்தும் தற்போதுள்ள கடன் வரிகள் ஊடாகவும் நிதியைப் பெறுவதற்கான அனைத்து மதிப்பீடுகளையும் தயார் செய்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

# கச்சத்தீவை மீட்க சரியான தருணம்

தமிழக மீனவர்களுக்கு தொடர்ந்து உயிர் சேதமும், பொருள் சேதமும் நடந்து கொண்டிருக்கிறது. மேலும் மீனவர்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு தருவது. ஏற்கெனவே இலங்கையிடம் இருக்கும் படகுகளை மீட்டு எடுத்து தமிழக மீனவர்களிடம் ஒப்படைப்பது. இலங்கையிடம் இருந்து கச்சத்தீவு மீட்டு எடுக்க சரியான தருணமாகும் என்று தீர்மானிக்கப்பட்டதுடன், மத்திய அரசுக்கு உரிய அழுத்தத்தைக் கொடுத்து கச்சதீவை மீட்டெடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# விளக்குகிறார் வடிவேல் சுரேஸ் எம்.பி

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஹரீன் பெர்னாண்டோ, ஆளும் கட்சி அமைச்சராகவும் சங்கத்தின் பொதுச்செயலாளரான நான், எதிர்க்கட்சியிலும் இருந்து ஒன்றிணைந்து பயணிக்கும்போது சங்கத்தின் முக்கிய முடிவுகள் தீர்மானங்கள் எடுக்கும் போது அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

எனவே, ஹரின் பெர்னாண்டோ மீண்டும் ஐக்கிய மக்கள் சக்திக்கு வரவேண்டும். அல்லது தான் அவர்களுடன் சென்று இணைய வேண்டும். எது எவ்வாறாக இருப்பினும் சங்கத்தினுடைய செயற்குழுவின் தீர்மானமே இறுதியானது என்றார். அரசியலோ அமைச்சுப்பதவிகளோ தனக்கு தேவையில்லை பெருந்தோட்ட மலையக மக்களின் சொத்தான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் பாதுகாக்கப்படவேண்டும். சங்கத்தின் எதிர்கால வேலைத்திட்டங்கள் சரியாக அமைய வேண்டும் என தெரிவித்தார் .

நாட்டினுடைய பொருளாதார சூழ்நிலையில் இன்னோரன்ன பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருப்பது பெருந்தோட்ட மலையக மக்களே. ஆகவே இந்தியாவிலிருந்து வழங்கப்பட்டுள்ள நிவாரண உதவிப் பொருட்களை அரசியல் தொழிற்சங்க பேதமின்றி பெருந்தோட்ட மலையக மக்கள் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றார்.

# அரசியல் ஸ்திரத்தன்மையை ஓரளவேனும் உறுதிப்படுத்தலாம்

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக் ஷவை சந்தித்து கலந்துரையாடல் ஒன்றினை முன்னெடுத்திருந்தார். நேற்று (2) நீதி அமைச்சில் முன்னெடுக்கப்பட்ட இந்த சந்திப்பில் நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமைகள் மற்றும் பொருளாதார நெருக்கடி குறித்து கலந்துரையாடியிருந்தனர்.

தற்போது இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைகளில் இருந்து மீள்வதற்கான நீண்டகால வேலைத்திட்டமொன்றை உருவாக்கும் முயற்சியில் தான் ஈடுபட்டு வருவதாகவும், அரசாங்கங்கள் மாறினாலும் உறுதியான கொள்கை வகுக்கப்பட வேண்டிய கட்டாயம் இருப்பதாகவும் தெரிவித்துள்ள நீதி அமைச்சர், தற்போது முன்வைக்கப்பட்டுள்ள உத்தேய 21 ஆம் திருத்த சட்டத்தின் மூலமாக பாரிய மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது எனவும் கூறியுள்ளார்.

எனினும் அரச நிறுவனங்களை சுயாதீனமாக செயற்படுத்த வேண்டிய கட்டாயம் மற்றும் நிறைவேற்று அதிகாரத்தின் அனாவசிய தலையிடுகள் தவரிக்கப்பட்டு பாராளுமன்ற கட்டமைப்பு பலப்படுத்தப்படுவது இப்போதுள்ள நிலையில் ஆரோக்கியமானதாக அமையும் எனவும், பாராளுமன்ற சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட்டு சகல கட்சிகளின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வதன் மூலமாக நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு மாற்று தீர்வுகளை காண முடியும் என நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகளில் இருந்து மீள்வதற்கு சர்வதேசத்தின் முழுமையான ஒத்துழைப்பு தேவைப்படுவதாகவும், அமெரிக்காவினால் இலங்கைக்கு கிடைத்துவரும் உதவிகளுக்கு இலங்கை நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர், தொடர்ந்தும் இரு நாடுகளுக்கு இடையிலான நட்புறவை பலப்படுத்த தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# இந்தியா வழங்க இணக்கம்

நீர்ப்பாசனத் துறை எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் தீர்வுகள் தொடர்பில் நேற்று முன்தினம் (01) பிற்பகல் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அவர்கள் இதனைத் தெரிவித்தார்.

உமா ஓயா மற்றும் மொரகஹகந்த திட்டங்களை இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்து பெரும்போகத்திற்கான அனுகூலங்களை பெற்றுக் கொடுக்க முடியும் என கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது. மொராகண, மஹகல்கமுவ சார் கால்வாய், மஹகோன குளம், விலகண்டிய குளம் மற்றும் கொடிகமுவ குளம் ஆகிய திட்டங்கள் இதற்கு இணையாக ஒரே நேரத்தில் பூர்த்தி செய்யப்பட உள்ளன. வெளிநாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அவர்கள் பணிப்புரை விடுத்தார்.

# முழு தோட்ட மக்களையும்...

எம்மைப் பொறுத்தவரை தோட்ட முகாமையாளர், உதவி முகாமையாளரைத் தவிர்ந்த தோட்டத்தில் உள்ள 100 சதவீதமானவர்களுக்கும் இந்த நிவாரணம் சென்றடைய வேண்டும் என்றார்.

தமிழக நிவாரணங்கள் விநியாகிக்கும் நடவடிக்கையில், இ.தொ.கா. வின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் அழுத்தம் கொடுப்பதாகவும், யார் யார் வறுமையானவர்கள், யாருக்கு இதனை விநியோகிக்க வேண்டும் என தமக்கு தெரியும் என இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளமைக்கு பதிலளிக்கும் முகமாக,நேற்று (2) கொழும்பிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தோட்டத் தொழிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் மற்றும் எவ்வித தொழிலிலும் ஈடுபடாதவர்கள் மாத்திரமே கிராம உத்தியோகத்தர்களின் பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளனர். அவ்வாறு பார்க்குமிடத்து ஒரு தோட்டத்தில் 20 சதவீதமானவர்களே இந்த நிவாரணங்களைப் பெற தகுதியானவர்கள் என கிராம உத்தியோகத்தர்கள் வகைப்படுத்தியுள்ளனர். ஆனால், காங்கிரஸானது ஒரு தோட்டத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் இந்த நிவாரணம் கிடைக்கப் பெற வேண்டும் என்பதாகும் என்றார்.

கொரோனா காலத்தில் 5,000 ரூபாய் கொடுப்பனவின் போது பல பிரச்சினைகளை தொழிலாளர்கள் எதிர்கொண்டனர். எனவே அவ்வாறான நிலையை தவிர்ப்பதற்காகவே நாம் இந்த நடவடிக்கையை முன்னெடுத்தோம். குறிப்பாக கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும் . இது அரசாங்கத்தின் சமுர்த்தி வேலைத்திட்டமோ அல்லது அரசாங்கத்தின் வேறு வேலைத்திட்டமோ அல்ல. அவ்வாறான வேலைத்திட்டங்கள் எனின் கிராம உத்தியோகத்தர்கள் கூறும் விடயங்கள் சரிவரும். தோட்டத்தில் உள்ள 20-30 சதவீத மக்களுக்கு நாம் இதனை அனுப்பவில்லை. முழுத் தோட்டங்களுக்கும் இதனை விநியோகிக்கவே பாடுபடுகிறோம். மேலும் முதற்கட்டமாக 9ஆயிரம் தொன் உணவுப்பொருள்களே கிடைத்துள்ளன. மிகுதியான 31ஆயிரம் மெட்றிக் தொன் தமிழகத்திலிருந்து வரவுள்ளது என்றார்.

# பைத்தியத்தை நிரூபித்துவிட்டார்

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்,

பிரதமர் பதவியை ஏற்றதும் ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தன்னுடன் இணைந்து செயற்பாடுவார்கள் என ரணில் நினைத்தார். எனினும் ரணிலுடன் மீண்டும் இணைந்து செயற்படுமளவுக்கு ஐக்கிய மக்கள் சக்தி முட்டாள்தனமான கட்சியல்ல எனவும் தெரிவித்தார்.

# பொலிஸ்...

நேற்று முன்தினம் (01) இடம்பெற்ற சம்பவம் குறித்து சமூக ஊடகங்களில் வீடியோ பகிரப்பட்டிருந்தது.

வாகனத்தில் குளிர்சாதனப்பெட்டியை கவனக்குறைவாக ஏற்றியமையாலேயே, அதிவேக நெடுஞ்சாலை நுழைவில் கடமையாற்றிய பொலிஸார் குறித்த வாகனத்தை, பெந்திகம இடமாற்றத்தில் வைத்து பொலிஸார் நிறுத்தியுள்ளனர். ஏற்றப்பட்ட குளிர்சாதன பெட்டியுடன் பயணம் செய்வது பாதுகாப்பானது அல்ல என்பதால், அதிவேக நெடுஞ்சாலைக்குள் நுழைய வேண்டாம் என்று பொலிஸ் அதிகாரி குறித்த சாரதியை அறிவுறுத்தினார்.

ஆனால் சாரதி ஆசனத்தில் இருந்த ஒருவரும் வாகனத்தில் இருந்த பெண் பயணியும் ஒருவரும் பொலிஸாரை ஆபாச வார்த்தைகளால் திட்டித் தீர்த்தனர்.

# சீ.ஐ.டியில் சரணடைந்த...

அதற்கிணங்கவே, சீ.ஐ.டியில் நேற்று (02) சரணடைந்த மஹிந்த கஹந்தகம கைது செய்யப்பட்டிருந்தார். மே 9 அன்று அமைதியான போராட்டக்கார்கள் மீதான தாக்குதல்களையடுத்து, உக்கிரமடைந்த பொது மக்களின் தாக்குதலில் காயமடைந்த கஹந்தகம, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பிலான நீதவான் விசாரணை, கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் முன்னெடுக்கப்பட்ட போது, சீ.ஐ.டி சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஆயிஷா ஜினசேன, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ‘மைனா கோ கம’ வில் போராட்டக்காரர்களை தாக்குவதற்கு மக்களைத் தூண்டும் வகையில் உரை நிகழ்த்தியதாக மன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். சாட்சியங்களை ஆராய்ந்ததன் பின்னர், ஜோன்ஸ்டன் எம்.பி, கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மஹிந்த கஹந்தகம உட்பட மேலும் மூவரை சீ.ஐ.டியினர் சந்தேகநபர்களாகப் பெயரிட்டுள்ளனர் என்றும் அறிவித்தார்.

# உயிர்காக்கும்...

கிட்டத்தட்ட 54 கோடி இலங்கை ரூபாய் பெறுமதியான 512,640 எனோக்ஸாபிரின் சோடியம் மருந்துகள் மற்றும் சிரிஞ்சுகளையே சீனா வழங்கவுள்ளது.

குருதி உறைதல் எதிர்ப்பு மருந்தான (குருதியை மெல்லியதாக மாற்றும்) எனோக்ஸாபிரின் சோடியம், மாரடைப்பு, நரம்பு இரத்த உறைவு மற்றும் சில சத்திரசிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

256,320 மருந்து மற்றும் சிரிஞ்சுகளைக் கொண்ட அதன்முதல் தொகுதி இன்று (03) நள்ளிரவு இலங்கையை வந்தடையும் என்றும் மற்றைய தெகுதி இம்மாத நடுப்பகுதிக்குள் விநியோகிக்கப்படும் என்றும் சீன தூதரகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதியுடன் தென்னகோன்...

மே.9 ஆம் திகதி கொழும்பில் உள்ள “கோட்டா கோ கம” மற்றும் “மைனா கோ கம” அமைதிப் போராட்டத் தளங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பான வழக்கு நீதவான் விசாரணை, கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் நேற்று முன்தினம் (01) முன்னெடுக்கப்பட்ட போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் அறிவித்தார்.

தனது சேவை பெறுநர், காலி முகத்திடலில் இடம்பெற்ற தாக்குதல்களைத் தடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்ததாக சட்டத்தரணி லதுவஹெட்டி குறிப்பிட்டார்.

காலி முகத்திடலுக்குள் நுழைந்த தாக்குதல்காரர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் இருந்து கிடைத்த முரண்பட்ட தொலைபேசி அழைப்புகளை தென்னகோன் பெற்றிருந்தாகவும் சுட்டிக்காட்டினார்.

பல்வேறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டமையால் குழப்பமடைந்த தென்னகோன், சம்பவம் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மூத்த அரசியல் பிரமுகரின் ஆலோசனையைப் பெற்றுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதிக்கும் தென்னகோனுக்கும் இடையில் தொலைபேசி உரையாடல் கிட்டத்தட்ட 11 நிமிடங்கள் நீடித்ததாக ஜனாதிபதி சட்டத்தரணி நளின் லதுவஹெட்டி மன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். மேலும், கடவுச்சீட்டை ஒப்படைக்காமை குறித்து கருத்து வெளியிட்ட அவர், தமது குறித்து, தொடர்பில் முறைப்பாட்டாளர் தரப்பு நீதிமன்றத்தை தவறாக வழிநடத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

இதேவேளை, சட்டமா அதிபரின் பணிப்புரையை புறக்கணித்து, மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை, இடமாற்றம் செய்ய பொலிஸ் திணைக்களம் தவறியமைக்கான காரணத்தை விளக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

# ரூ.695 பில்லியன் குறைநிரப்பி தொடர்பில் புதனன்று விவாதம்

எதிர்வரும் 7 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் விசேட அறிவிப்பொன்று முன்வைக்கப்படவிருப்பதுடன், அது குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் பி.ப 5.30 மணி வரை நடைபெறவுள்ளது.

அத்துடன், 2020ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளைகள் அன்றையதின விவாதத்தின் பின்னர் நிறைவேற்றப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (02) முற்பகல் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அதேநேரம், எதிர்வரும் 07ஆம் திகதி முற்பகல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட 2022.04.09ஆம் திகதிய 2274/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி மற்றும் கடன் எல்லையை ஒரு ட்ரில்லியன் ரூபாவினால் உயர்த்துவதற்கு உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானம் என்பன விவாதம் இன்றி நிறைவேற்றப்படவுள்ளன.

# அரசாங்கத்துக்கு ஆயுள் குறைவு

■ பா.நிரோஸ்

தற்போது அமைக்கப்பட்டுள்ள அரசாங்கம், சர்வகட்சி அரசாங்கமல்ல; எனவே தற்போதைய அரசாங்கம் நீண்டக்காலத்துக்கு நீடிக்காது என சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று (02) கட்சி தலைவர்கள் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்குத் தீர்வாக சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமென நாம் கோரியிருந்தோம். எனினும், தற்போதைய அரசாங்கம் சர்வகட்சி அரசாங்கமல்ல. இந்த அரசாங்கத்தால் நீண்ட காலத்துக்குப் பயணிக்க முடியுமென நாம் நம்பவில்லை. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கான எந்தவொரு திட்டத்தையும் அரசாங்கம் தற்போது வரையில் முன்வைக்கவில்லை.

சுயாதீன அணிக்கென ஒரு தலைவரை இன்னமும் நியமிக்க வில்லை. ஆனால், விமல் வீரவன்சவை முன்னிலைப்படுத்தி பயணிக்கின்றோம். அவர் தெளிவான அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்; தெளிவாக கணிக்கின்றார். எனவே அவரை முன்னிலைப்படுத்துவது தவறில்லை. இரட்டைக் குடியுரிமைக் கொண்டவர்களுக்கு எமது பாராளுமன்றத்தில் இருப்பதற்கு எந்தவிதமான உரிமைகளும் இல்லை என்பதே எமது நிலைப்பாடு எனவும் தெரிவித்தார்.



# எம்.பிகளுக்கான சிற்றுண்டிச்சாலையை தற்காலிகமாக மூடவேண்டுமாம்

## கட்சி தலைவர்கள் கூட்டத்தில் வலியுறுத்து

■ பா.நிரோஸ்



பாராளுமன்றத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிற்றுண்டிச்சாலையில், பாராளுமன்ற உறுப்பினர்களின் உணவுக்கு ஏற்படும் செலவுகள் தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு உள்ளது. நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையை கருத்திற்கொண்டு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிற்றுண்டிச்சாலையை தற்காலிகமாகவேனும் மூடவேண்டுமென வலியுறுத்தியுள்ளதாக தெரியவருகின்றது.

சபாநயாகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (02) பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற கட்சி தலைவர்களின் கூட்டத்திலேயே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் எம்.பிக்களுக்கு எவ்வாறான உணவுகள் வழங்கப்படுகின்றன? அதற்கான செலவுகள் எவ்வளவு என்பதை மதிப்பீடு செய்ய வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களின் உணவுகள் தொடர்பான முழுமையான தகவல்களை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென இதன்போது கட்சி தலைவர்கள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் வலியுறுத்தினர்.

கட்சி தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர், நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையை கருத்திற்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிற்றுண்டிச்சாலையை தற்காலிகமாகவேனும் மூடவேண்டுமென சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அறிய முடிகிறது. அடுத்த வாரப் பாராளுமன்ற அமர்வின்போது, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்றத்தில் வழங்கப்படும் உணவுகள் தொடர்பான அறிவிப்பு ஒன்றை சபாநாயகர் வழங்குவார் எனவும் அறிய முடிகிறது.

# 5 மாதங்களில் 288,645 கடவுச்சீட்டுகள் விநியோகம்



2022ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 288,645 பேருக்கு கடவுச்சீட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பேச்சாளரும் பிரதிக் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருமான பியூமி பண்டார, 2021ஆம் ஆண்டில் 382,506 கடவுச்சீட்டுகள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டு உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக, வெளிநாட்டு வேலைவாய்ப்பை பலர் நாடியுள்ளமையே அதிகமான கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்கான காரணம் என்று தெரிவித்த அவர், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள ஊழியர்கள், மிகவும் மும்முரமாகப் பணியாற்றி வருவதாகவும் பேச்சாளர் தெரிவித்தார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் செயற்பாடுகளுக்காக வருபவர்கள், நேரத்தை முன்பதிவு செய்து கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்பதிவு செய்யாதவர்கள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தைச் சுற்றி பல கிலோ மீற்றர் தூரம் வரிசைகள் காணப்படுவதாகவும், நாளாந்தம் 1,500க்கும் அதிகமானோர் சேவையாற்றி வருவதாகவும் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஊழலற்ற அரசாங்கம் அமையும் வரையில்

# சர்வதேச உதவிகள் கிடைக்காது

■ பா.நிரோஸ்

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைகளில் இருந்து நாட்டை மீட்பதற்காக, வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாக இருந்தால், நாட்டில் ஊழலற்ற, ஸ்திரமான அரசாங்கம் அமைய வேண்டுமென தெரிவிக்கும் பிரதான எதிர்க்கட்சியின் உறுப்பினர் நளின் பண்டார, அதுவரையில் நாட்டுக்கு சர்வதேச உதவிகள் கிடைக்காதெனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (2) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே

> மூச்சுவிட முடியாமல் இருந்த ராஜபக்ஷர்களுக்கு ரணிலே மூச்சை வழங்கினார்

இதனை கூறினார்,

ரணில் - கோட்டா அரசாங்கம் என்றே தற்போதைய அரசாங்கத்தைக் கூறவேண்டும். எனினும் இந்த அரசாங்கத்தின் 'ரிமோட்கண்ரோல்' தற்போது பசிலிடமே இருக்கிறது. தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர், தங்களது நெருங்கிய நண்பர்களான பெரும் செல்வந்தர்களுக்கு வரி சலுகைகளை வழங்கியது. இதனால் பொதுமக்களுக்கு எந்த விதமான நன்மைகளும் கிடைக்கவில்லை.



நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. வெளிநாடுகளில் கையேந்தும் நாடாக இலங்கை மாறியுள்ளது. நாட்டில் டொலரும் இல்லை; ரூபாயும் இல்லை. அரசாங்கத்தின் தற்போதைய வரி அதிகரிப்பால், நாட்டு மக்கள் மோசமாக பாதிக்கப்பட்டு உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

ரணில் பிரதமரானதும் டொலரைக் கொண்டுவருவார் என நம்பினார்கள். ஆனால் பிரதமராக ரணில் நியமிக்கப்பட்டிருந்தாலும் அரசாங்கத்தின் 'ரிமோட் கண்ரோல்' இன்னும் ஊழல்வாதியான காகத்திடமே இருக்கிறது. நாட்டில் புதிய அரசாங்கம் ஒன்று மலர்ந்தால் மாத்திரமே டொலர் கிடைக்கும்.

> ரணில் – கோட்டா அரசாங்கம் என்றே அரசாங்கத்தைக் கூறவேண்டும். எனினும் இந்த அரசாங்கத்தின் 'ரிமோட்கண்ரோல்' தற்போது பசிலிடமே இருக்கிறது

மே 9 ஆம் திகதிக்கு பின்னர் கோட்டா, காகம், மைனா என்பன பங்கருக்குள் ஒடியொழியும் நிலை ஏற்பட்டது. எங்கும் செல்ல முடியாத நிலை ராஜபக்ஷர்களுக்கு ஏற்பட்டது. மூச்சுவிட முடியாமல் இருந்த ராஜபக்ஷர்களுக்கு ரணிலே மூச்சை வழங்கினார். ஸ்திரமான, ஊழலற்ற அரசாங்கம் இலங்கையின் உருவாகியுள்ளதென சர்வதேசம் ஏற்றுக்கொண்டால் மாத்திரமே, இலங்கைக்கு வெளிநாடுகள் உதவ முன்வரும் எனவும் தெரிவித்தார்.

ரம்புக்கனை சூட்டு சம்பவம்

# பொலிஸ்மா அதிபர், சீ.ஐ.டி பணிப்பாளருக்கு நோட்டீஸ்

கேகாலை மாவட்ட முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி.கீர்த்திரத்ன உட்பட பொலிஸ் அதிகாரிகளைக் கைது செய்யுமாறு கேகாலை நீதவான் பிறப்பித்த உத்தரவை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட ரிட்மனு தொடர்பான சமர்ப்பணங்களை சமர்ப்பிப்பதற்காக பொலிஸ் மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (02) நோட்டீஸ் அனுப்புமாறு உத்தரவிட்டது.

கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி ரம்புக்கனையில் பொலிஸாரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து, அதனுடன் தொடர்புடைய கீர்த்திரத்ன மற்றும் பல பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேற்குறிப்பிட்ட ரிட் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

குறித்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா, தம்மிக கணேபொல ஆகியோரடங்கிய அமர்வு முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, மனுவில் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதானிகளுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 27ஆம் திகதி தமது சமர்ப்பிப்புகளை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

நீதவானால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு சட்டரீதியற்றது என்றும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமது சேவை பெறுநர்களை விடுவிக்க வேண்டும் என்றும் மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஷவேந்திர பெர்னாண்டோ கோரிநின்றார்.

மனுதாரர்களைக் கைது செய்வதற்கு கேகாலை நீதவான் பிறப்பித்த உத்தரவு சட்டரீதியானது என்று சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகியிருந்த சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஜனக பண்டார மன்றுக்கு அறிவித்தார்.

ஏப்ரல் 19ஆம் திகதியன்று பழைய விலையில் எரிபொருளை வழங்குமாறு கோரி, ரம்புக்கணை பிரதான வீதிகள், ரயில்வே கடவையை மறித்து 15 மணி நேரத்துக்கும் மேலாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ரயில் கடவைக்கு அருகே ஏற்பட்ட பதற்றமான சூழலையடுத்து கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்ட பொலிஸார் பின்னர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 42 வயதான சமிந்த லக்ஷன் என்பவர் உயிரிழந்திருந்தார்.

ஓடைக்குள் விழுந்த ஓட்டோ

# தாயும் மகளும் பலி; தந்தை, மகன் படுகாயம்

ஏ9 பிரதான வீதியின் அநுராதபுரம், கவரக்குளம் பகுதியில் நேற்று (02) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளதுடன், படுகாயமடைந்த தந்தையும் மகனும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளை பிரதேசத்தை சேர்ந்த ஒரே குடும்பத்தினர் ஜயஶ்ரீ மகாபோதியை வழிபடுவதற்காக ஓட்டோவில் பயணித்த போது, காலை 5.29 மணியளவில் கவரக்குளம் பிரதேசத்திலுள்ள ஓடையொன்றுக்குள் விழுந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

விபத்தில் 40 வயதான தாயும் 13 வயதான மகளும் உயிரிழந்ததுடன், படுகாயமடைந்த தந்தை மற்றும் 11 வயதான மகன் ஆகியோர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஓட்டோ சாரதியின் தூக்க கலக்கமே விபத்துக்கான காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்வி அமைச்சுக்கான நிதி போதுமானதாக இல்லை

■ பா.நிரோஸ்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் கல்வி அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி போதுமானதாக இல்லை. எனினும் கல்வி அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியை குறைக்க வேண்டாமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்;

கொரோனா வைரஸ் தொற்று 2020ஆம் ஆண்டு ஆரம்பத்தில் பரவ ஆரம்பித்ததைத் தொடர்ந்து 2020, 2021ஆம் ஆண்டுகளில் பாடசாலை நாள்கள் வெகுவாக இழக்கப்பட்டுள்ளன. எனவே இந்த வருடத்தில் பாடசாலை நாள்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அதிபர், ஆசிரியர்களுடன் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி மாணவர்களின் கல்வி செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத



வகையில் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கும் இம்மாதம் 10ஆம் திகதி கலந்துரையாட உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த வருடத்துக்கான வரவு -செலவு திட்டத்தில் கல்வி அமைச்சுக்கு ஒதுக்கீட செய்யப்பட்டுள்ள நிதியை குறைக்காது தொடர்ந்து பயன்படுத்த வேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் நாட்டில் ஏற்பட்டுள்ள விலை உயர்வுக்கு மத்தியில் கல்வி அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி போதுமானதாக இருக்குமா என்பது தெரியவில்லை. அத்தியாவசிய சேவைகளுக்காக நிதியை பயன்படுத்த வேண்டும். ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிக்கு அப்பால் மேலதிக நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள அமைப்புகளுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வெளிநாட்டு நிதி உதவியின் கீழ் முன்னெடுக்கப்படும்

# வேலைத்திட்டங்களை துரிதப்படுத்தவும்

## ஜனாதிபதி பணிப்புரை

வெளிநாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

நீர்ப்பாசனத் துறை எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் தீர்வுகள் தொடர்பில் நேற்று முன்தினம் (01) பிற்பகல் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கடந்த மூன்று நாள்களில் மொத்த மின் உற்பத்தியில் 80% நீர் மற்றும் காற்றாலை மின்சாரம் மூலம் தேசிய மின்கட்டமைப்பிற்கு வழங்கப்பட்டமை தெரியவந்துள்ளது. மிதக்கும் சூரியசக்தி பேனல் திட்டங்களை மேம்படுத்தவும் கூரையில் பொருத்தப்படும் சூரியசக்தி பேனல்களுக்கு வழங்கப்படும் உதவிகளை அதிகரிக்கவும் நுகர்வோரை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

சிறுபோகத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபையின் கீழ் நீர் வழங்கப்படும் நீர்ப்பாசன நிலங்களில் 50% ஏற்கெனவே பயிரிடப்பட்டுள்ளது. 225,000 மகாவலி வீட்டுத்தோட்டங்கள் மேலதிக பயிர்களை பயிரிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்ததோடு. இதுவரை நெல் பயிரிப்படாத காணிகளில் வேறு பயிர்களைப் பயிரிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

வெள்ளிக்கிழமைகளில்

# தொழில் திணைக்களம் மூடப்படும்

தொழில் திணைக்களத்தில் வாரத்துக்கு நான்கு நாள்கள் மாத்திரமே பணி இடம்பெறும் எனவும் இன்று தொடக்கம் வெள்ளிக்கிழமை நாளில் மூடப்படும் என தொழில் ஆணையாளர் நாயகம் ஜெனரல் பீ.கே.பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தொழில் திணைக்களத்தின் பிரதான காரியாலயம் மற்றும் அனைத்து பிரதேச காரியாலயங்களும் இன்று 3 ஆம் திகதி முதல் வாரத்தில் அனைத்து வெள்ளிக்கிழமை தினத்திலும் மூடப்பட்டிருக்கும் எனவும், நாட்டின் தபோதையா நெருக்கடி, வளப்பற்றாக்குறையை அடிப்படையாகக்கொண்டு அரச செலவீனங்களை கட்டுப்படுத்துவதற்கு, அரச நிறுவனங்களின் சேவையாளர்களை வேலைக்கு அழைப்பதை வரையறுப்பதற்காக, அரச நிர்வாகத்தினால் விடுக்கப்பட்டிருக்கும் சுற்று நிருபத்துக்க அமையவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மஹிந்தவை மீண்டும் பிரதமராக்க முயற்சி

■ எஸ்.தில்லைநாதன்



பாராளுமன்றம் திருட்டு கும்பல் வசமே தற்போது உள்ளது. மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமர் ஆக்குவதற்கு அந்தத் திருடர் கூட்டம் தயாராகி வருவதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம்சாட்டியுள்ளது.

யாழ். கச்சேரியில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில், மேற்கண்டவாறு தெரிவித்துள்ள முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன், மஹிந்த 'அலிபாபா'வும் அவருடன் சேர்ந்து மக்களின் வரிப் பணங்களை சுரண்டிய திருடர்களும், மீண்டும் மஹிந்தவை கொண்டுவருவதற்கு முயற்சி செய்து வருகிறார்கள்.

ஏனெனில், 21ஆம் திருத்தம் மூலம், ஜனாதிபதியிடம் இருக்கின்ற அதிகாரங்களை பாராளுமன்றத்துக்கு வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதியிடம் இருக்கின்ற அதிகாரங்களை பாராளுமன்றத்திற்கு வழங்கும் போது, பிரதமரே ஆகக் கூடுதலான அதிகாரம் கொண்டவராக காணப்படுவார். தற்போதிருக்கும் பிரதமர் ரணிலிடம் அதிகாரம் சென்றால், ராஜபக்ஷர்களை பாதுகாப்பார். இல்லாவிட்டால் அவரை ராஜபக்ஷவின் திருடர்கள் பதவி நீக்கம் செய்துவிட்டு, பிரதமராக மஹிந்தவை அரியணையில் அமர்த்துவார்கள்.

மேற்குலகத்தின் செல்லப்பிராணியாகவும் ராஜபக்ஷர்களின் நண்பராகவும் இருக்கும் ரணில், ராஜபக்ஷர்களை காட்டிக் கொடுக்க மாட்டார்.

பொருளாதார நெருக்கடியில் வாழும் இலங்கை மக்களுக்கு, தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் உலருணவுப் பொதிகளை வழங்கியிருந்தார். உணவுப் பொதிகளை வழங்கி விட்டு, கச்சதீவை மீட்பதற்கு இதுவே தருணமெனக் கூறியிருப்பது, தமிழகம் எமது தொப்புள் கொடி உறவா என்ற கேள்வியை எழுப்புகின்றது.

நமது நாட்டின் பொருளாதார பிரச்சினையைச் சாதகமாகப் பயன்படுத்தி, இந்தியா தனது ஆதிக்கத்தை இலங்கையில் மேற்கொண்டு வருகின்றமை, இதனூடாக வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இலங்கையின் பொருளாதார வளங்களை, இந்தியாவும் சீனாவும் போட்டி போட்டுப் பெற்றுக் கொள்ளும் நிலையில், இலங்கையின் அரிதான பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள், இருநாடுகளின் வசம் சென்றுள்ளன.

ஆகவே, இலங்கைக்கு நிவாரண பொருட்களை இந்தியா வழங்கவேண்டுமாயின், '13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்', 'சிறையில் உள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்' போன்ற நிபந்தனைகளை தமிழகம் விதித்திருந்தால், உண்மையில் தொப்புள் கொடி உறவுகளாக இருந்திருப்பார்கள். ஆனால், அவர்கள் அதை செய்யவில்லை என்று, மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

### வழமைக்குத் திரும்பும் வரையிலும்

# செலவினங்களை குறைக்கவும்

■ பைஷல் இஸ்மாயில்



நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடி நிலைமை, இயல்பு நிலைக்குத் திரும்பும் வரை, கிழக்கு மாகாண சபையின் நிதியொதுக்கீட்டின் நிதிச் செலவினங்களை உடனடியாகக் குறைக்குமாறு, கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக நலன்புரிச் சேவைகள், கிராமிய மின்சார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் தனது அமைச்சின் கீழுள்ள சகல மாகாண திணைக்கள தலைவர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

தனது அமைச்சின் கீழ் இயங்கும் அனைத்து திணைக்கள தலைவர்களுடனான இணையவழி கலந்துரையாடலின்போது, இந்த அறிவுறுத்தலை வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண மக்களும் கடும் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளனர். இவ்வாறான நிலையில், அனைத்து நிறுவனங்களும் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் தமது நிதி ஒதுக்கீட்டை மிகச் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்ற ஆலோசனையையும் அவர் வழங்கியுள்ளார்.

தங்களது திணைக்களத்திலும், திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்களிலும் நடைபெறும் சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்களை அச்சிடுதல் ஆகியவற்றை தவிர்க்குமாறு அறிவுறுத்தியுள்ள அவர், அத்தியாவசியமற்ற உத்தியோகபூர்வ போக்குவரத்து நடவடிக்கைகள், இதுவரை ஆரம்பிக்கப்படாத அத்தியாவசியமற்ற திட்டங்கள், கட்டுமானப் பணிகளை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

உலக வங்கியின் நிதியுதவிடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வேலைத்திட்டங்களை மிக நேர்த்தியான முறையில் முன்னெடுத்துச் செல்லுமாறும் கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக நலன்புரிச் சேவைகள், கிராமிய மின்சார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் மேலும் தெரிவித்துள்ளார்.

### வடமாகாணத்துக்கு

# 138 வைத்திய அதிகாரிகள் நியமனம்

■ நிதர்சன் வினோத்



வடமாகாணத்துக்கு 138 வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், 132 வைத்திய அதிகாரிகளே தமது கடமைகளை இதுவரை பொறுப்பேற்றுள்ளார்கள் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வைத்திய அதிகாரிகள் நியமனம் தொடர்பாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், மத்திய சுகாதார அமைச்சால் உள்ளக பயிற்சியை நிறைவுசெய்த வைத்திய அதிகாரிகளுக்கு மே 30ஆம் திகதி முதல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் வடமாகாணத்துக்கு 138 வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் 132 வைத்திய அதிகாரிகள் இதுவரை தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்கள்.

இதில் யாழ் மாவட்டத்துக்கு 23 பேரும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 22 பேரும் வவுனியா மாவட்டத்துக்கு 22 பேரும் மன்னார் மாவட்டத்துக்கு 35 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 31 பேரும் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

# தமிழக அரசின் உதவிகள் வவுனியாவை வந்தடைந்தன



■ க. அகரன்

தமிழக அரசால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட உதவிப் பொருட்கள் ரயில் ஊடாக வவுனியாவை நேற்று (02) காலை வந்தடைந்துள்ளன.

இந்த உதவிப் பொருட்கள் வசதியற்ற, தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

வவுனியா பிரதேச செயலகத்துக்கு 12,015 பொதிகள், வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு 3,560 பொதிகள் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்துக்கு 2,000 பொதிகள் வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு 4,575 பொதிகள் என, வவுனியா மாவட்டத்துக்கு மொத்தமாக 22,250 குடும்பங்களுக்கான பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட உள்ளன.

இந்த உணவுப் பொதிகளை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் பொறுப்பேற்று, குறித்த பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரிடம் கையளித்திருந்தனர்.



# காத்திருந்தோருக்கு ஏமாற்றமே மிஞ்சியது

■ சகா

சமையல் எரிவாயு சிலிண்டர்களை பெறுவதற்காக 10 மணி நேரம் காத்திருந்து ஏமாற்றமடைந்த மக்கள் மனம் விரக்தியுடன் வீடுகளுக்குத் திரும்பினர்,

காரைதீவு விபுலானந்த மைதானத்தில் சுமார் 1,000 பேர், ஜூன் 1 ஆம்திகதி, பத்து மணி நேரம் காத்திருந்தனர்.

அக்கரைப்பற்று, சம்மாந்துறை போன்ற பிரதேசங்களில் அங்குள்ள முகவர்கள், இன்று எரிவாயு வழங்கப்படமாட்டாது என்று கூறியது போன்று, இந்தப் பிரதேசங்களில் உள்ள முகவர்களும் அப்படி சொல்லியிருந்தால், கொளுத்தும் வெயிலில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்றும் அரசாங்கம் தான் எங்களை வதைக்கிறது என்றால் எரிவாயு முகவர்களும் எங்களை வதைக்கிறார்கள் என்றும் இதற்கெல்லாம் இறைவனின் தீர்ப்பு உண்டு என்றும் மக்கள் மனக் கவலையுடன் தெரிவித்தனர்.

### மட்டு. வைத்தியசாலைகளுக்கு

# வைத்திய அதிகாரிகள் நியமனம்



■ எம் எஸ் எம் நூர்தீன்



மட்டக்களப்பு மாவட்டத்தில் 18 வைத்திய அதிகாரிகள் பல்வேறு வைத்தியசாலைகளுக்கு மே 31ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளனர்.

18 வைத்திய அதிகாரிகள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல்வேறு வைத்தியசாலைகளுக்கும் நியமனம் பெற்று, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கான கடிதங்களை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர். குணசிங்கம் சுகுணன் வழங்கி வைத்தார்.

பலகாலமாக ஆளணி பற்றாக்குறையாக காணப்பட்ட வாகரை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மாங்கேணி வைத்தியசாலை, மீராவோடை வைத்தியசாலை, காங்கேயனோடை வைத்தியசாலை, திக்கோடை வைத்தியசாலை , களுவாஞ்சிகுடி, காத்தான்குடி, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைகள் இவற்றினுள் சிலவாகும்.

"எமது மாவட்ட சுகாதார சேவையை முடிந்தவரை மேம்படுத்த திடசங்கற்பம் கொண்டு, தடைகளை உடைத்தபடி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை முன்நோக்கி நடைபயிலும்" என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் குணசிங்கம் சுகுணன் இதன்போது தெரிவித்தார்.

# காத்திருந்தோருக்கு சிற்றுண்டி



■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு ஒரு மாதத்தின் பின்னர் ஜூன் 1 ஆம் திகதி இரவு 6,600 லீற்றர் மண்ணெண்ணெய் கிடைத்துள்ளது.

இரவு 11 மணியளவிலேயே இதை மக்களுக்கு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட நிலையில், மண்ணெண்ணெய்க்காக, நேற்று (02) அதிகாலை 3 மணிவரை மக்கள் வரிசையில் நின்றிருந்தனர்.

சிறுவர்கள், பெண்கள், பெரியவர்கள் இவ்வாறு காத்திருந்த வேளை, வரிசையில் நின்ற மக்களுக்காக இளைஞர் குழு ஒன்று, சிற்றுண்டிகளை வழங்கி மக்களின் களைப்பைப் போக்கியது.

'நம்பிக்கையை இழக்காதீர்கள்' என்ற வாசகம் அந்தப் பொதியில் எழுதப்பட்டிருந்தது.

# வெளிநாட்டு குடியுரிமை கொண்ட நபர் சிக்கினார்

■ செ.கீதாஞ்சன்



முல்லைத்தீவு, மாங்குளம் நீதவான் நீதிமன்றத்தில், நீதிபதி மற்றும் நீதிமன்றத்தினை அவமதித்து பேசிய குற்றத்துக்காக வெளிநாட்டு குடியுரிமை கொண்ட நபரை ஜூன் 07 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் மீது, மே 31ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டது. அந்தச் சம்பவம் தொடர்பில், சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர் வெளிநாட்டு குடியுரிமையைக் கொண்ட பொக்கணை பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். அவரைக் கைது செய்த பொலிஸார், மாங்குளம் நீதவான் நீதிமன்றில் ஜூன் 1ஆம் திகதி ஆஜர்படுத்தினர்.

இதன்போது, மாங்குளம் நீதிமன்ற நீதிபதியையும் நீதிமன்றத்தையும் அவமதித்துப் பேசியுள்ளார். இந்நிலையிலேயே அவரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# சிறுமியின் சடலத்தில் காயங்கள் இல்லை

■ க. அகரன்

வவுனியா, கணேசபுரம் பகுதியில் பராமரிப்பற்ற கிணற்றிலிருந்து மே 30ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட சிறுமி யதுர்சியின் பிரேத பரிசோதனை அறிக்கையில், சிறுமி நீரில் மூழ்கியமையால் ஏற்பட்ட மூச்சுத்திணறலால் மரணம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என சட்ட வைத்திய அதிகாரி ஆர். தனுஜன் தெரிவித்தார்.

சிறுமியின் உடலில் எவ்வித காயங்களோ அல்லது எவ்வித தடயங்களோ காணப்படவில்லை என்றார்.

# நியாய விலையில் பொருட்கள் விற்பனை




■ அஸ்லம் எஸ்.மௌலானா

> கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தகர்கள், எதிர்வரும் காலங்களில் பெரிதாக இலாபங்களை எதிர்பார்க்காமல் நுகர்வோருக்கு உணவுப் பொருட்களை முடிந்தளவுக்கு குறைந்த விலையில் விற்பதற்கு முன்வந்துள்ளார்கள்

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு கல்முனை மாநகர பொதுச் சந்தையில் நுகர்வோருக்கு நியாயமான விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை விற்பனை செய்வதற்கு மாநகர பொதுச் சந்தை வர்த்தகர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தகர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம், ஆசாத் பிளாஸா மண்டபத்தில் நேற்று முன்தினம் (01) மாலை, நடைபெற்றபோது இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

சங்கத்தின் தலைவர் ஏ.பி. ஜமால்தீன் ஹாஜியார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சுமார் 250 இற்கு மேற்பட்ட வர்த்தகர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் முன்னணி வர்த்தக மையமாகத் திகழ்கின்ற இந்தச் சந்தையை முன்னேற்றுவதற்கான விடயங்கள் பற்றியும், சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், மக்களின் கஷ்டங்களை கருத்தில் கொண்டு, கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தகர்கள் எதிர்வரும் காலங்களில் பெரிதாக இலாபங்களை எதிர்பார்க்காமல் நுகர்வோருக்கு உணவுப் பொருட்களை முடிந்தளவுக்கு குறைந்த விலையில் விற்பதற்கு முன்வர வேண்டுமென சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.கபீர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்த வேண்டுகோளுக்கு அனைத்து வர்த்தகர்களும் இணக்கம் தெரிவித்ததுடன், எதிர்காலங்களில் நியாயமான விலைகளில் உணவுப் பொருட்களை விற்பனை செய்வதற்கு உறுதியளித்துள்ளனர்.

இந்த விடயத்தை, எமது சந்தை வர்த்தக சங்கம் மிகவும் கரிசனையுடன் கண்காணித்து, வழிநடத்தும் என அதன் செயலாளர் ஏ.எல்.கபீர் தெரிவித்தார்.

மேலும், கொரோனா அசாதாரண சூழ்நிலையின்போது, கல்முனை மாநகர பொதுச் சந்தையில் கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக அமல்படுத்துவதிலும் பொதுமக்களை பாதுகாக்கின்ற விடயத்திலும் இப்பொதுச் சந்தை வர்த்தகர் சங்கம், மாநகர சபையுடனும் சுகாதாரத்துறையினருடனும் இணைந்து ஆக்கபூர்வமான செயற்பாட்டுகளில் ஈடுபட்டு, முன்னுதாரணமாகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

சொன்னதை நிரூபிக்காவிட்டால்

# சட்ட நடவடிக்கை

**ஜீவன் எம்.பி எச்சரிக்கை**



இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மீது முன்வைத்த குற்றச்சாட்டை நிரூபிக்காவிட்டால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ள மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக, தமிழக அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்களை பகிர்ந்தளிக்கும் போது, பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளருமான ஜீவன் தொண்டமானின் அழுத்தம் அதிகமாக காணப்படுவதாக இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் நெவில் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் (1) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, இக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட நிலையில், அதற்குப் பதிலளிக்கும் முகமாகவே ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பில் எழுத்து மூலம், இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்துக்கு அறிவிக்கவுள்ளோம் என்றார்.



## 2 சைக்கிளை திருடிய மூவர் 3 சைக்கிளுடன் சிக்கினர்

இரண்டு மோட்டார் சைக்கிள்களை திருடிய குற்றச்சாட்டில், விடுமுறையில் சென்றிருக்கும் இராணுவ வீரரும், இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற வீரர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களால் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் இரண்டும், அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் இரத்தினபுரி கொலொன்ன பிரதேசத்திலேயே இடம்பெற்றுள்ளது.

கொலொன்ன புதிய நகரத்தில் வசிக்கும் இளைஞர்கள் இருவரின், ஒரே வகையான மோட்டார் சைக்கிள்கள் இரண்டே களவாடப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் தலா நான்கரை இலட்சம் பெறுமதி வாய்ந்தது என விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள்களில் ஒன்று, வெலிமடை பிரதேசத்திலும் மற்றொன்று திஸ்ஸமஹாரகம, லுகம்வேர பிரதேசத்திலும் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## சேறு பூசுவதாக முறைப்பாடு

■ *நீலமேகம் பிரசாந்த்*

இ.தொ.காவிலிருந்து வெளியேறிய கருப்பையா ஜெயராம் தனக்கெதிராகவும் இ.தொ.காவுக்கு எதிராகவும் சேறு பூச முற்படுவதாக தெரிவித்து, நுவரெலியா பிரதேச சபை தவிசாளரும் இ.தொ.காவின் உப தலைவருமான வேலு யோகராஜ், கந்தப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தன்மீது அபாண்டமான பொய்களையும் வதந்திகளையும் குறித்த உறுப்பினர் பரப்பி வருவதாக, நேற்று (2) செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

எனவே, கருப்பையா ஜெயராம் தனக்கு, ஐந்து கோடி ரூபாய் நட்டஈடு வழங்க வேண்டுமெனவும் கோரி அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## பெருந்தோட்ட உரிமைகள் குறித்து ஊடக செயலமர்வு

■ *மலைவாஞ்ஞன்*

200 வருடங்களாகியும் பெருந்தோட்ட சமூகத்தால் முழுமையாகப் பெறப்படாத கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், காணி, வீட்டுரிமை தொடர்பாக ஊடகவியலாளர்களைத் தெளிவுபடுத்தும் கருத்துப் பரிமாற்ற நிகழ்வு, நேற்றுமுன்தினம் (01) நுவரெலியா செட்டிக்கஸ் நிறுவனத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில், தேசிய ரீதியாக பெருந்தோட்ட சமூகம் கல்வி, சுகாதாரம், காணி, வீட்டுரிமை, பொருளாதாரம் போன்ற விடயங்களை அடைவதற்கு எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அதைத் தீர்ப்பதற்கு எவ்வாறான வழிமுறைகளை கையாள வேண்டும் என்பது தொடர்பாகவும் இதன்போது ஊடகவியலாளர்களின் பங்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

பெருந்தோட்ட சமூகம், இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு சுமார் 200 வருடங்களாக பங்களிப்பு செய்து வருகின்றது. இருந்தபோதிலும், மக்கள் மேற்குறிப்பிட்ட விடயங்களை முழுமையாகப் பெறமுடியாததன் காரணமாக, அவர்கள் அன்றாடம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நாட்டின் பிரஜைகள் என்ற வகையில், அவர்களுக்கு இந்த உரிமைகள் சமமாக பங்கிடப்பட வேண்டும். ஆனால், அவ்வாறு கிடைப்பதில்லை. அதற்கு சட்டங்கள், கொள்கைகள் தடையாக உள்ளன.

இதனை தீர்ப்பதற்கு கொள்கை ரீதியான நடவடிக்கைகள் அவசியம் என்பதனை உணர்ந்து





செயப்படுவதே முக்கியமானது. இதனை அனைத்து இன மக்களும் உணர்ந்து செயற்படுவதற்கு முன்வர வேண்டும் என்றும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது வளவாளராக அருட் தந்தை மைக்கல் ராஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## உணவு நெருக்கடியில் இருந்து மீளக் கூட்டம்

■ *என்.ஆராச்சி*

எதிர்காலத்தில் எதிர்கொள்ளவுள்ள உணவு நெருக்கடிக்கு மாவட்ட ரீதியில் முகங்கொடுப்பதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, கேகாலை மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

கேகாலை மாவட்ட செயலாளர் மஹிந்த எஸ். வீரசூரிய தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (1) நடைபெற்ற இந்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், உணவு பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு வீட்டுத்தோட்டம், பசுமைத் திட்டம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும், சகல அரச நிறுவனங்களுக்குரிய வெற்று இடங்களில் பயிர்செய்கைகளை ஆரம்பித்தல், உற்பத்தி செய்யப்படாத இடங்களில் நீண்ட மற்றும் குறுகிய பயிர் திட்டங்களை ஏற்படுத்துதல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் சமுர்த்தி பயனாளிகள் கட்டாயமாக வீட்டுத் தோட்டங்களை உருவாக்குவது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.



தமிழக நிவாரணங்கள்

## ஹட்டனை வந்தடைந்தன

■ *மலையக நிருபர்கள்*

இலங்கையில் பொருளாதார நிதி நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தமிழ்நாட்டு அரசாங்கத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்கள், அனைத்து மாவட்ட மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், அம்பகமுவ பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளுக்கான தமிழக நிவாரணப் பொருட்கள், கொழும்பிலிருந்து ரயிலில், ஹட்டன் ரயில் நிலையத்துக்கு நேற்று (2) கொண்டு வரப்பட்டு, உடனடியாகவே விநியோகிக்கும் பணிகள் இடம்பெற்றன.

கொழும்பிலிருந்து ஹட்டன் ரயில் நிலையத்துக்கு 10 கிலோ கிராம் அரிசி அடங்கிய 22,350 மூடைகள் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், இவை அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவின் 67 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள 23,350 பேருக்கு பகிர்ந்தளிக்கப்பட உள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், இதனை பகிர்ந்தளிக்கும் விடயங்களில் இதுவரை தமக்கு எவ்வித அரசியல் அழுத்தங்களும் ஏற்படவில்லை என அம்பகமுவ பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டு விவகாரம்

## மூவரின் விளக்கமறியல் 20 வரையிலும் நீடிப்பு

■ *மொரதொட்ட என். ஆராச்சி*

ரம்புக்கனை நகரில் ஏப்ரல் 19ஆம் திகதி இடம்பெற்ற அமைதியின்மையை அடுத்து, நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக, மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில், அன்றிருந்த கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான பீ. கீர்த்திரத்ன, பொலிஸ் அதிகாரிகள் இருவர் உட்பட மூவர் கைது



செய்யப்பட்டனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அந்த மூவரும், கேகாலை நீதவான் வாசனா நவரத்ன முன்னிலையில், ஜூன் 1 ஆம் திகதி ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போதே, அம்மூவரையும் இம்மாதம் 15 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## கொழுந்து சேகரிப்பவர் பிஞ்சை கசக்கினார்

■ *பிரியங்கர ஜாதுங்கம*

பச்சை கொழுந்தை சேகரிக்கும் 35 வயதானவர், 13 வயதான பாடசாலை மாணவியை, அச்சிறுமி யின் வீட்டில் வைத்தே துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

சந்தேநபர், கலவான தெல்கொட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார் என கலவான பொலிஸார் தெரிவித்தனர்.

தேயிலை தொழிற்சாலைகளுக்கு பச்சை கொழுந்துகளை சேகரிக்கும் மேற்படி நபர், சிறுமி தனியாக இருப்பதை கண்டு, அச்சிறுமியின் வீட்டுக்குள் நுழைந்து, பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், கைது செய்யப்பட்ட நபரை, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

## கழுத்தை வெட்டிய நபருக்கு வலை

■ *சுமனசிறி குணதிலக்க*

பிபில, கொடகம பல்வேறு சேவை கூட்டுறவு சங்கத்துக்கு உரிய கேவெல்வல கிராம வங்கியின் முகாமையாளரின் கழுத்தை, கத்தியால் வெட்டிவிட்டுச் சென்ற நபர் தொடர்பில், விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வங்கியை மே 30ஆம் திகதி காலை திறப்பதற்கு முயன்றபோதே, யாரோ ஒருவர், முகாமையாளரின் கழுத்தை கத்தியால் கீறிவிட்டுச் சென்றுவிட்டார்.

25 வயதான அந்தப் பெண் முகாமையாளர், திருமணம் முடிக்காதவர் எனத் தெரிவித்துள்ள பொலிஸார், அந்த முகாமையாளர் இன்னும் முறைப்பாடு செய்யவில்லை என்றும், எனினும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பிபில பொலிஸார் தெரிவித்தனர்.

டயகம– போடைஸ் வீதியில்

## தேயிலைத் தூளுடன் குடைசாய்ந்த லொறி

**வீதி சீரின்மையால் விபத்துகள் தொடர்வாக குற்றச்சாட்டு**

■ *துவாரகஷான்*

டயகம நகரத்திலிருந்து போடைஸ் வழியாக ஹட்டன் செல்லும் பிரதான பாதை தற்போது மழை காரணமாக ஆபத்தான நிலையில் காணப்படுகிறது.

இதற்கமைய, நேற்று (2) அதிகாலை ஒரு மணி அளவில், டயகம கிழக்கு தோட்டத்தில் இருந்து 8 தொன் தேயிலைத் தூளுடன், கொழும்பு நோக்கிப் பயணித்த லொறி, அல்பியன் பகுதியில் பாதையை விட்டு குடை சாய்ந்ததில், அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களுக்கு முன்பு என். சி. தோட்ட பகுதியில் வைத்து, இலங்கை



போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 17 பேர் காயமடைந்தனர்.

அதன்பின்னர், இப்பாதையை புனரமைத்து தருமாறு கோரி மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து, மத்திய மாகாண வீதி அதிகார சபை ஊடாக, முன்னாள் இராஜாங்க அமைச்சர், ஜீவன் தொண்டமான் தலைமையில் பாதை புனரமைப்பதற்கான அடிக்கல் 2020ஆம் ஆண்டு நாட்டப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. .

எனினும், கடந்த ஆறு மாத காலமாக அபிவிருத்தி பணிகள் அனைத்தும் இடை நிறுத்தப்பட்டன. தற்போது இப்பாதை ஆபத்தான நிலையை எதிர்நோக்கியுள்ளது.

பாதையில் பாரிய அளவிலான குழிகள் காணப்படுவதால், மழைநீர் குழிகளில் நிறைந்திருப்பதால் பாதை எது, குழி எது என்று தெரியாத அளவிற்கு பாதை காணப்படுகிறது.

இதனால் வாகன சாரதிகள், பொதுமக்கள் அச்சத்துடன் இப்பாதையில் பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது.

நேற்றுயை தினம் லொறி விபத்துக்கான காரணம், இப்பாதை புனரமைக்கப்படாமையே ஆகும். எனவே பாதையில் ஏற்படும் விபத்துகளைத் தடுப்பதற்கு, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர் .

# காலம் கடந்த ஞானம் என்றாலும் முயற்சி செய்து பாருங்கள்

தீர்மானங்களை எடுக்கும் பதவிநிலையில் இருப்போர், எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, தூரநோக்கு சிந்தனையுடன் தீர்மானங்களை எடுக்கவேண்டும். இல்லை, 'வெள்ளம் வரும் வரையில் காத்திருந்துவிட்டு, வந்ததன் பின்னர் அணையைக் கட்டுவதாய் அமைந்துவிடும்' அது, யதார்த்தத்துக்கு எவ்விதமான பயனையும் தராது.

அரசாங்கத்திலிருக்கும் முக்கியஸ்தர்கள் விடுக்கும் அதிரடியான அறிவிப்புகளை பார்க்குமிடத்து, பிரச்சினைகளுக்கு அவை உடனடியான தீர்வுகளாக அமையாது. எனினும், நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்குப் பின்னர், அதன் பலாபலனை நன்கு அனுபவிக்கமுடியும். வீட்டுக்கு வீடு பலாமரக் கன்றொன்றை நடுகை செய்யும் திட்டத்தை, ஐந்து வருடங்களுக்கு முன்னரே அறிமுகம் செய்திருந்தால், இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் ஓரளவுக்குத் தாக்குப்பிடித்திருக்கலாம்.

பலாக் கன்றுகளை நடுவதுடன் நின்றுவிடாது, அவற்றைப் பராமரிக்கவும் வேண்டும். ஏதாவது, அனர்த்தங்கள் ஏற்படுகையில், தறிக்க வேண்டுமாயின், முறையான அனுமதியை பெற்றுக்கொள்ளும் வகையில், சட்டங்களில் திருத்தங்கள் அவசியம். அரசாங்கத்திடம் நிவாரணங்களைப் பெறுவோரின் வீட்டு வளவுகளில், பயன்தரும் கன்றுகளை நடுகை செய்வதை ஊக்கப்படுத்தவேண்டும்.

சலுகைகளைப் பெற்றுக்கொண்டு, வீட்டு வளவுகளில் ஆகக் குறைந்தது, வீட்டுத் தோட்டத்தையேனும் செய்யாதவர்கள், நிவாரணங்கள், சலுகைகள் போன்றவற்றை பெறுவதற்கு தகுதியில்லாதவர்கள் ஆகின்றார்கள். இவர்களுக்கான சலுகைகளை நிறுத்தும் வகையிலான தீர்மானங்களை எட்டவேண்டும்.

எதற்கெடுத்தாலும் கையேந்தும் நிலைமைக்கு முற்றுப்புள்ளிவைத்து, ஏதாவது ஒன்றிலேனும் சொந்தக்காலில் நிற்பதற்கு வழிசமைத்துக் கொள்ள வேண்டும். இதனூடாக, அயலவர்களுடன் பண்டமாற்றின் கீழ், மரக்கறிகளையேனும் மாற்றிக்கொள்ள முடியும்.

அதனைவிடவும், உணவு வீணடிக்கப்படுவதை முற்றுமுழுதாய் தவிர்க்கவேண்டும். கொழும்பு நகரில் மட்டும், மூவாயிரத்துக்கும் அதிகமான ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், சாப்பாட்டுக் கடைகள் மூடப்பட்டுள்ளன. எனினும், கொழும்பில் நாளாந்தம் 350 மெட்ரிக் தொன் உணவு வீணடிக்கப்படுவதாக, கொழும்பு மாநகர சபையின் புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது.

தங்களுடைய குடும்பத்தினருக்கு போதுமான அளவுக்கு சமைத்து உண்ணுவதை வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். வீணாக்கப்படுவதை தவிர்ப்பதன் ஊடாக, மற்றுமொரு குடும்பம் ஒருவேளை உணவையேனும் உண்ணக்கூடியதாய் இருக்கும். இல்லையேல், யாழ்ப்பாணத்தில் இரண்டு பாண்களை அபகரித்துச் சென்றதைப் போல, உணவுக்காக சண்டையிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும்.

இந்நிலையில், நாடு பூராவும் ஒரு இலட்சம் பலா மரக்கன்றுகள் நடுவதாக சுற்றாடல் அமைச்சர் ஹாபீஸ் நஸீர் அறிவித்துள்ளார். அந்த வேலைத்திட்டம் இன்று (03) முதல் அமல்படுத்தப்பட இருக்கின்றது. இதனை, ஒவ்வோர் ஆண்டும் முன்னெடுக்க வேண்டும். இன்னும் பத்து, 15 வருடங்களின் பின்னர், கையேந்தி நிற்க வேண்டிய நிலைமை ஏற்படாது.

இதேவேளை, காடுகளில் அனுமதியின்றி பலாமரக்கன்றுகளை நடுவதற்கும், அதிலிருந்து அறுவடைச் செய்வதற்குமான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுமென அமைச்சர் மஹிந்த அமரவீரவின் யோசனையும் வரவேற்கத்தக்கது. இதைப் பயன்படுத்தி, காட்டை அழித்துவிடக்கூடாது.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

ஆசைகளைத் துறந்தவுடன், மனிதனின் ஆன்மா ஏகாந்த நிலைக்கு செல்கின்றது. மனித ஆன்மா மகத்துவம் பெறுவதற்கு, மானிட தேகம், தெய்வீக ஆற்றலுடன் மிளிர்கின்றது.

பக்குவப்பட்ட ஆன்மா, தூயசிந்தனையுடன் தன்நிலை உணர்கின்றது. ஆன்மாவுக்கான விடுதலை இதுதான். கடவுளைத் தேடுபவர்களில் அநேகர், வாழ்க்கை எதுவென இன்னமும் புரிந்துகொள்ளவே இல்லை.

உயிரின் உணர்வை உள்ளத்தில் புரிந்துகொள்ள, தெளிவு நிலை வேண்டும். ஆடம்பர வாழ்வே நிலையானது என எண்ணுவது, தன்னை உணராத அவலம் போன்றது.

கடவுள் படைத்த மானுட தேகம், உலகம் பற்றிய தேடலுடன் இணைவதுமில்லை. அதற்குப் பாரிய அறிவு, ஞானம் கைகொடுக்க வேண்டும். இது, இதயத்துடன் மென்மையான இசைபோல் ஸ்பரிசிக்கும் ஞானக்கதிர்களாகும். இதை உணர்ந்தால், பிறவிகள் எதற்கு என்ற உண்மை புரியும். உணர்வது எளிதல்ல!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

உலக உணவு நெருக்கடி:

# அடுப்பிலிருந்து நெருப்புக்குள் இலங்கை



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் தீவிரத்தை, இலங்கையர்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். ஆனால், இது வெறும் தொடக்கம் மட்டுமே என்பது போலவே, நிகழ்வுகள் நடந்தேறுகின்றன.

புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றபோது, 'உடனடியாக வெளிநாடுகள் கடன் கொடுக்கும்; பிரச்சினைகள் தீரும்' என்று சொல்லப்பட்டது. "எல்லா இலங்கையர்களுக்கும், மூன்றுவேளை உணவை உத்தரவாதப்படுத்துவதே எனது பணி" என்று பதவியேற்றவுடன் ரணில் விக்கிரமசிங்க சொன்னார்.

நடந்தது யாதெனில், அவர் பதவியேற்ற போது மூன்று வேளை உண்டவர்கள், இப்போது இரண்டு வேளையும், இரண்டுவேளை உண்டவர்கள் ஒரு வேளையும் உண்கிறார்கள். புதிய பிரதமரின் சாதனையாக இதையே சொல்லவியலும்.

நிலைமை இன்னும் மோசமடையும் என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால், அதே அமைச்சர்கள்; அதே பதவிகள்; அதே சலுகைகள்; அதே பாராளுமன்றம். அதிகாரத்தில் உள்ளவர்களின் சலுகைகளில், மேலதிக கொடுப்பனவுகளில் எதுவித குறையையும் அரசாங்கம் வைக்கவில்லை. பாராளுமன்றில் சலுகை விலையில்தான் இன்னமும் உணவு பரிமாறப்படுகிறது. ஆனால், அவர்களால் வாய்கூசாமல் நிலைமை மோசமடையும் என்று சொல்ல முடிகிறது.

இன்றைய நெருக்கடி தொடங்கி, இரண்டு மாதங்களுக்கு மேலாகின்ற நிலையில் குறுங்கால, நீண்டகாலத் திட்டங்கள் எதுவுமின்றி, அரசாங்கம் செயற்படுகிறது. இப்போது எதிர்ப்பாளர்கள், கலகக்குரலை எழுப்புபவர்கள் மெதுமெதுவாகக் குறிவைக்கப்படுகிறார்கள். எதிர்க்கருத்துகளை, விமர்சனங்களை அடக்குவதிலேயே அரசாங்கம் கவனம் குவிக்கின்றது.

இலங்கை, உணவு நெருக்கடியை ஏற்கெனவே எதிர்கொண்டுள்ளது. உணவுப் பொருட்களின் தட்டுப்பாட்டையும் விலை உயர்வையும், உழைக்கும் மக்களால் உணர முடிகிறது. "இயேசு வருகிறார்", "கல்கி அவதாரத்தில் கடவுள் வருகிறார்" என்று ஆருடம் சொல்லும் மதப்பிரசங்கிகளுக்கு எதுவிதத்திலும் குறைவற்ற வகையில், எமது அரசியல்வாதிகளும் "எல்லாம் சரி வரும்" என்று சொல்கிறார்கள்.

எமக்கு மறைக்கப்படுகின்ற மிக முக்கியமான உண்மை ஒன்றுண்டு. உலகம், மிகப்பாரிய உணவு நெருக்கடியில் சிக்கியுள்ளது. இது, இலங்கை போன்ற மூன்றாமுலக நாடுகளை மிகவும் மோசமாகத் தாக்கும்.

கடந்த ஏப்ரல் மாதம், ஐக்கிய நாடுகள் சபை 'உக்ரேனியப் போரின் உணவு, சக்தி, நிதி அமைப்புகள் மீதான உலகளாவிய தாக்கம்' (Global Impact of war in Ukraine on food,energy and finance systems) என்ற தலைப்பில், ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தது. அதில் கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில்,

(1) உணவுப் பொருட்களின் விலைகள் 34% அதிகரித்துள்ளன.

(2) மசகு எண்ணெயின் விலை 60%த்தால் அதிகரித்துள்ளது.

(3) எரிவாயு, உரம் ஆகியவற்றின் விலைகள் இருமடங்காகியுள்ளன.

உலகம் உணவு, சக்தி, நிதி ஆகிய மூன்று நெருக்கடிகளால் சிக்கித்தவிக்கிறது. 107 நாடுகள், குறைந்தது இம்மூன்றில் ஒரு நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளன. 69 நாடுகள் இம்மூன்று நெருக்கடிகளிலும் சிக்கித் தவிக்கின்றன.

இந்த நெருக்கடிகளில் பிரதானமானது உணவாகும். இதை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் போது, உலகளாவிய ரீதியில் 45 மில்லியன் மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொண்டுள்ளார்கள். இத்தொகை நாளுக்குநாள் அதிகரிக்கும்.

"நாம் நிலைமையை உடனடியாகக் கவனிக்கவில்லை என்றால், பெரும் பஞ்சத்தை காண்போம். நாடுகளின் ஸ்திரமின்மையைக் காண்போம். பெருமளவில் இடம்பெயர்வதைக் காண்போம்" என்று உலக உணவு நிறுவகம் எச்சரிக்கிறது.

இந்த உணவு நெருக்கடி, இரண்டு வகையான சிக்கல்களை உடையது. வளர்முக நாடுகளில், உணவின்மையும் பட்டினியும் உருவாகியுள்ளன. வளர்ச்சியடைந்த நாடுகளில், உணவுப் பொருட்களின் விலை, கணிசமாக அதிகரித்துள்ளது.

இந்த நெருக்கடி குறித்து, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ் அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார். அதில், "உக்ரேனின் விவசாய உற்பத்தி வழமைக்குத் திரும்பி, ரஷ்யா, பெலாரஸின் உணவு மற்றும் உர உற்பத்தி, போருக்கு முந்தைய நிலையை எட்டாமல், உலகளாவிய உணவுப் பாதுகாப்பு பிரச்சினைக்கு உண்மையில், நிலையான தீர்வு இல்லை". இக்கூற்று மிகுந்த கவனிப்புக்கு உரியது.

உலகளாவிய உணவு உற்பத்தியில், ரஷ்யாவும் உக்ரேனும் முக்கிய பங்கு வகிக்கின்றன. உலகின் தானிய ஏற்றுமதியில், மூன்றில் ஒரு பங்குக்கும், சூரியகாந்தி எண்ணெய் ஏற்றுமதியில் பாதிக்கும் மேலான பங்குக்கும் இந்த இரண்டு நாடுகளும் சொந்தமாகும்.

உக்ரேனின் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் உலகளாவிய உணவுப் பிரச்சினையை மோசமாக்குகின்றன என்பது உண்மையாயினும், அது மோசமான நிலைமைக்கு முக்கிய காரணம் அல்ல. ரஷ்யாவின் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருக்கும் மேற்கத்திய பொருளாதாரத் தடைகளே மிகவும் சக்திவாய்ந்த காரணமாகும்.

உக்ரேனுடன் ஒப்பிடுகையில், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் பிற பொருட்களின் ஏற்றுமதியில் ரஷ்யா மிகப் பெரியது. ரஷ்யா உலகின் மிகப்பெரிய கோதுமை ஏற்றுமதியாளராக உள்ளது. உக்ரேனை விட, உலகளாவிய உணவுப் பொருள் ஏற்றுமதியில் கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமாக உள்ளது.

ரஷ்யா, உலகின் மிகப்பெரிய உர ஏற்றுமதியாளராக உள்ளது. மேற்கத்திய பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ளும் பெலாரஸும் ஒரு முக்கியமான உர ஏற்றுமதியாளர். இவ்விரு நாடுகளும், உலகளாவிய உர விநியோகத்தில் காற்பங்குக்கும் அதிகமாகப் பங்களிக்கின்றன.

இந்நெருக்கடிக்கு முன்பே உரங்களின் விலை, எரிபொருள் விலை உயர்வின் காரணமாக அதிகரித்திருந்தது. உர உற்பத்தி, இயற்கை எரிவாயுவை பெரிதும் நம்பியுள்ளது. ரஷ்யா, உரத்தை ஏற்றுமதி செய்வதைத் தடுக்கும் மேற்கு நாடுகளின் பொருளாதாரத் தடைகள், நிலைமையை மோசமாக்கியுள்ளன.

சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தின் மூத்த ஆராய்ச்சியாளரான டேவிட் லேபோர்டே, "உணவு அமைப்பு எதிர்கொள்ளும் மிகப்பெரிய அச்சுறுத்தல் உர வர்த்தகத்தின் சீர்குலைவு" என்று சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், "கோதுமை ஒரு சில நாடுகளை பாதிக்கும். உரப் பிரச்சினை, உலகில் எல்லா இடங்களிலும் உள்ள ஒவ்வொரு விவசாயியையும் பாதிக்கும். கோதுமை மட்டுமின்றி, அனைத்து உணவுப் பொருட்களின் உற்பத்தியிலும் உரத்தட்டுப்பாடு சரிவை ஏற்படுத்தும்" என்று தெரிவித்தார்.

மே மாத நடுப்பகுதியில், உலகின் இரண்டாவது பெரிய கோதுமை உற்பத்தியாளரான இந்தியா, கடுமையான வெப்ப அலையால் ஏற்பட்ட பயிர் இழப்புகள் காரணமாக, கோதுமை ஏற்றுமதியை நிறுத்துவதாக அறிவித்தது. ஏற்கெனவே, ஏப்ரலில் இந்தோனேஷியா பாம் ஒயில் ஏற்றுமதியை நிறுத்துவதாக அறிவித்திருந்தது. உலக, பாம் ஒயில் விநியோகத்தில், 60 சதவீதத்தை இந்தோனேசியா கொண்டுள்ளது.

இந்தியா, கோதுமை ஏற்றுமதியை நிறுத்துவது ஆசிய நாடுகளுக்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். 2021-2022 ஆம் ஆண்டில் இந்தியா முதன்மையாக, இலங்கை, இந்தோனேசியா, யெமன், நேபாளம், மலேசியா, பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு ஏழு மில்லியன் மெட்ரிக் தொன் கோதுமையை ஏற்றுமதி செய்தது. 2022-2023 ஆம் ஆண்டில், கோதுமை ஏற்றுமதியை 10 மில்லியன் தொன்னாக விரிவுபடுத்த இந்தியா இலக்கு நிர்ணயித்திருந்த நிலையில், ஏற்றுமதியை இந்தியா நிறுத்தியுள்ளது.

ரஷ்ய - உக்ரேன் நெருக்கடிக்கு முன்பே, உலகில் உணவு நிலைமை ஆபத்தானதாக இருந்தது. காலநிலை மாற்றத்துக்கும் அதற்கும் நிறையத் தொடர்பு உண்டு. அதிகரித்து வரும் தீவிர வானிலை நிகழ்வுகள், விவசாயம் மற்றும் உணவு உற்பத்திக்கு தீங்கு விளைவித்துள்ளன. கடந்த தசாப்தத்தில், 1.7 பில்லியன் மக்கள் தீவிர வானிலை நிகழ்வுகள், காலநிலை தொடர்பான பேரழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு சீனாவில் ஏற்பட்ட வெள்ளம், குளிர்கால கோதுமை அறுவடையின் விளைச்சலை, வரலாற்றில் என்றுமில்லதாவாறு குறைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் சமீபகாலமாக நிலவி வரும் வெப்ப அலையும் பொய்த்த பருவமழையும், அங்குள்ள பல்வேறு உணவு உற்பத்திகளுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

அமெரிக்க மாநிலங்களில் வரட்சி காரணமாக, 40 சதவீத கோதுமை அழிவடையும் நிலையில் உள்ளது. ஐரோப்பாவில், குறைந்த மழைப்பொழிவு காரணமாக விளைச்சல் நிச்சயமாக அபாயகரமாக கட்டத்தைத் தொடும். இவையனைத்தும் உணவு நெருக்கடிக்கு மேலதிகமான அச்சுறுத்தலைக் கொடுத்துள்ளன.

உணவு நெருக்கடியின் தீவிரத்தை உணர்ந்து, 35க்கும் மேற்பட்ட நாடுகள் தங்கள் சொந்த உணவு பாதுகாப்புக்கு பயந்து, உணவு ஏற்றுமதியில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. சில ஏற்றுமதிக்கு முழுமையான தடை விதித்துள்ளன. செல்வந்த நாடுகள் இப்போதே உணவுப் பதுக்கலைத் தொடங்கிவிட்டன.

கொரோனா தடுப்பூசியை எவ்வாறு செல்வந்த நாடுகள் அதிகமாக வாங்கி, மூன்றாலக நாடுகளுக்கு இல்லாமல் செய்தனவோ, அதேநிலைமையே இப்போது உணவுப் பொருட்களுக்கும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், உணவுத் தேவையின் பெரும்பகுதிக்கு, இறக்குமதியை நம்பியிருக்கும் இலங்கையின் நிலை மிகவும் பரிதாபகரமானது.

## கடிதங்கள்

மந்துவில், மல்லிகைத்தீவு கிராமங்களில்

### குடிநீர் நெருக்கடி

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மந்துவில், மல்லிகைத்தீவு ஆகிய கிராமங்களில் குடிநீர் பெற்றுக்கொள்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள்.

இந்தக் கிராமங்களில் உள்ள கிணறுகள் அதிக ஆழமானவையாகக் காணப்பட்ட போதிலும், அவை வற்றிப் போயுள்ளன. இந்த நிலையில், மூன்று கிலோ மீற்றருக்கும் அப்பாலுள்ள கிராமங்களுக்குச் சென்றே, மக்கள் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்கின்றனர்.

கடந்த காலங்களில் இந்தக் கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டதாகவும், ஆனால், அது இந்த வருடத்துடன் நிறுத்தப்பட்டு விட்டதாகவும், அதற்குக் காரணம், குடிநீர் விநியோகத்துக்காக பிரதேச செயலகத்துக்கு கிடைத்த நிதி முடிந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எது எவ்வாறு இருந்தபோதிலும், இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு உடனடியாக, தற்காலிக தீர்வுகாணும் அதேவேளை, குளாய் நீர்விநியோகம் மேற்கொள்ளத்தக்க வகையில் நிரந்தரத் தீர்வும் காணப்படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேபோன்று, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கேப்பாப்புலவு, பிலக் குடியிருப்பு ஆகிய பகுதிகளிலும் குடிநீர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் குறிப்பாக, இந்தப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருக்கும் குழாய்க் கிணறுகள் பழுதடைந்துள்ளதாகவும் அவற்றைப் புனரமைத்து தருமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

–யது பாஸ்கரன்



புதுடெல்லி

# இந்தியாவில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனா சோனியாவுக்கும் தொற்று

இந்தியாவில் தமிழ்நாடு உட்பட சில மாநிலங்களில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரித்து வருகிறது. நேற்று (02) காலை எட்டு மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 3,712 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. இந்நிலையில் புதிய பாதிப்பு கடுமையாக உயர்ந்துள்ளது எனத் தெரிகிறது.

அதிகபட்சமாக கேரளாவில் 1,197 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. அங்கு சுமார் 2 மாதங்களுக்கு பிறகு தினசரி பாதிப்பு மீண்டும் ஆயிரத்தை தாண்டி உள்ளது. மகாராஷ்டிராவில் 1,081 பேருக்கு தொற்று உறுதியாகி உள்ளது.



இதுதவிர, புதுடெல்லியில் 368, அரியானாவில் 187, கர்நாடகாவில் 178, உத்தர பிரதேசத்தில் 124, தமிழ்நாட்டில் 139 பேர் புதிதாக பாதிக்கப்பட்டுள்ளனர். தினசரி பாதிப்பு உயர்ந்ததால் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 19,509 பேர் சிகிச்சையில் உள்ளனர். தினசரி பாதிப்பு அதிகரித்தாலும் புதிதாக உயிரிழப்புகள் எதுவும் இல்லை.

இதேவேளை, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து அவர் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார். சோனியா காந்தி, கடந்த சில நாள்களாக தொடர்ந்து காங்கிரஸ் தலைவர்களை சந்தித்து உரையாடி வரும் நிலையில், அவருக்கு லேசான காய்ச்சல் ஏற்பட்டது. இதையடுத்து எடுக்கப்பட்ட பரிசோதனையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதியானது. இதையடுத்து தனிமைப்படுத்திகொண்ட அவருக்கு மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது.

காஷ்மீர்

## ஒற்றை காலுடன் 3 கிலோ மீற்றர் நடந்து பாடசாலை செல்லும் மாணவர்

தற்போதைய நவநாகரீக உலகில் பக்கத்தில் செல்வதற்கு கூட வாகனங்களை தான் பெரும்பாலானவர்கள் பயன்படுத்துகிறார்கள். ஆனால், காஷ்மீர் மாநிலத்தை சேர்ந்த மாணவர் ஒற்றை காலுடன் மூன்று கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று வருகிறார்.

இவரது பெயர் பர்வேஷ் அஹமது. அரசு பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்து வருகிறார். சமீபத்தில் நடந்த விபத்தில், இடதுகாலை இழந்தார். அவரது குடும்பம் வறுமையில் வாடியதால், செயற்கை கால் பொருத்துவதற்கான பண வசதி இல்லை.

இருந்த போதிலும், பர்வேஷ் தனது தன்னம்பிக்கையை இழக்கவில்லை. இவருக்கு எதிர்காலத்தில் டொக்டராகி சமூகத்துக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற இலட்சியம் உள்ளது.



இதனால் எப்படியும் தனது கனவை நனவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில், வீட்டுக்குள் முடங்கி விடாமல், தினமும் பாடசாலைக்கு மூன்று கிலோ மீற்றர் தூரம் ஒற்றை காலுடன் நடந்தே செல்கிறார்.

இதற்காக காலையும் மாலையும் புத்தக பையை தோளில் சுமந்து கொண்டு ஒரு காலுடன் நடந்தே சென்று வருகிறார். இதற்கு ஒருமணி நேரம் ஆகிறது. கஷ்டப்பட்டாலும் தனது குறிக்கோளை அடையும் வரை போராடுவேன் என அவர் நம்பிக்கையுடன் தெரிவித்து உள்ளார்.

மதுரை



## இந்து கடவுள்களை வசைபாடியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

மதுரையில் எம்.பி. வெங்கடேசன் தலைமையில் கம்யூனிஸ்ட், விடுதலைசிறுத்தைகள், திராவிடர் கழகம் ஆகிய கட்சிகள் சார்பில் நடந்த செஞ்சட்டை பேரணியில், இந்து கடவுள்களை அவமதித்து கோஷம் எழுப்பப்பட்டது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

இந்து முன்னணியும் இந்து மக்கள் கட்சியும் அளித்துள்ள முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: மதுரையில் மே 29ஆம் திகதி நடந்த செஞ்சட்டை பேரணியில் பங்கேற்றவர்களில் சிலர், இந்து சமுதாயத்தையும் இந்து கடவுள்களையும் இழிவான வார்த்தைகளால் வசைபாடி, பாடல்களைப் பாடியும் கோஷமிட்டும் பேரணியில் வந்தனர். குறிப்பாக கடவுள் கண்ணனையும் சுவாமி ஐயப்பனையும் இழிவுபடுத்தியதுடன் முருகனுக்கு நேர்த்தி செய்யும் சடங்குகளையும் கொச்சைப்படுத்தினர்.

இப்படி பேசி அமைதியான சமுதாயத்தில் கலவரத்தை தூண்டிவிட்டு குளிர்காய நினைக்கும் இழிவாக கோஷமிட்டவர்கள் மீது, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

செந்துறை

## அரச மரத்துக்கும் வேம்பு மரத்துக்கும் திருமணம்

### மணமகன் 'அரசன்'; மணமகள் 'வேம்பு நாயகி'

திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த கைலாசம் என்பவர் விவசாயி. இவரது மனைவி அழகம்மாள். இவர்களுக்கு ஆறு மகள்கள் உள்ளனர். தனக்கு ஆண் குழந்தை வேண்டும் என்று விரும்பிய கைலாசம், சில ஆண்டுகளுக்கு முன்பு ஊருக்கு பொதுவான இடத்தில் அரச மரக்கன்றை நட்டு, அதைப் பிள்ளைபோல் நினைத்து, வளர்த்து வந்தார்.

சில நாள்களிலேயே அரச மரக்கன்றின் அருகில் வேப்ப மரக்கன்றும் தானாகவே வளர்ந்தது. அரச மரமும் வேப்ப மரமும் அருகிலேயே வளர்ந்ததால் கிராம மக்கள் அதனை தெய்வமாக வணங்கி வந்தனர். ஒவ்வொரு செவ்வாயும் வெள்ளியும் வழிபாடு நடத்தி வருகின்றனர். குறிப்பாக, குழந்தை வரம் வேண்டி, ஏராளமான பொதுமக்கள் இங்கு வந்து வழிபட்டு செல்வது வழக்கம்.

இந்நிலையில், வைகாசி மாத வளர்பிறை முகூர்த்த நாளில், உலக நன்மைக்காகவும் தொடர் மழை பெய்ய வேண்டியும் அரச மரத்துக்கும் வேப்ப மரத்துக்கும் திருமணம் செய்து வைக்க ஊர் மக்களால் முடிவு செய்யப்பட்டது. இதற்கு கைலாசமும் சம்மதம் தெரிவித்தார்.




இதைத் தொடர்ந்து திருமண அழைப்பிதழும் அச்சடிக்கப்பட்டது. அதில் மணமகன் 'அரசன்' என்றும், மணமகள் 'வேம்பு நாயகி' என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. சுற்றியுள்ள ஏழு கிராமங்களுக்கு வீடு வீடாக சென்று அழைப்பிதழ் விநியோகம் செய்யப்பட்டது.

இதனையடுத்து கிராம மக்கள் அந்தப் பகுதிக்கு திரண்டு வந்தனர். அரச மரத்துக்கு பட்டு வேட்டியும் வேப்ப மரத்துக்கு சேலையும் கட்டப்பட்டு, மாலைகள் அணிவிக்கப்பட்டன. இரண்டு மரங்களுக்கும் தீபாராதனையை தொடர்ந்து, மந்திரங்கள் ஓத மேளதாளம் முழங்க, கிராம மக்கள் புடைசூழ அரச மரத்துக்கும் வேப்ப மரத்துக்கும் திருமணம் நடந்தது. கோவில் குருக்கள் வேப்ப மரத்துக்கு தாலி கட்டி திருமணத்தை நடத்தி வைத்தார். விருந்தாளிகளாக வந்த கிராம மக்களுக்கு அறுசுவை உணவு பரிமாறப்பட்டது.

பாட்னா

## கள்ளக்காதலருக்கு திருமணம் செய்த ஊர் மக்கள்

### பரிதவிக்கும் குழந்தைகள்

பீகார் மாநிலம், சுகேலாலி கிராமத்தைச் சேர்ந்தவர் முத்துராம். இவரது மனைவி சுசிலா தேவி. இந்தத் தம்பதிக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். முத்துராம் மும்பையில் கார் டிரைவராக வேலை பார்த்து வருவதால், மும்பையிலேயே தங்கியிருப்பார்.

இந்தச் சூழ்நிலையில், வினோத் ராம் என்ற திருமணமாகாத வாலிபருடன் சுசிலா தேவிக்கு கள்ளத்தொடர்பு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆறு மாதங்களாக கள்ளத்தொடர்பில் இருந்துவந்த இவர்கள், செவ்வாய்க்கிழமை (31) இரவு ஊர் மக்களிடம் கையும் களவுமாக சிக்கினர்.

சுசிலா தேவியின் வீட்டுக்குள் வினோத் ராம் நுழைந்தபின்னர், வெகு நேரமாகியும் கதவை திறக்காத நிலையில், ஊர் மக்கள், இருவரையும் பிடித்து மின் கம்பத்தில் கட்டி வைத்து, விடிய விடிய அடித்து, உதைத்தனர்.

விடிந்ததும் சுசிலா தேவியின் கழுத்தில் வினோத் ராமை தாலி கட்ட வைத்துள்ளனர். வினோத் ராம் குடும்பத்தினர் முன்னிலையில், இந்த திருமணம் நடந்துள்ளது. அதன்பின்னர் இருவரையும் ஊரை விட்டு வெளியேற்றினர். சுசீலா தேவி, தனது கள்ளக்காதலனுடன் சென்றதால் அவரது மூன்று குழந்தைகளும் நிர்க்கதியாகத் தவிக்கின்றனர்.

உறுதியான வங்கி நாமமாக

# கொமர்ஷல் வங்கி தெரிவு

2022ஆம் ஆண்டில், இலங்கையின் உறுதியான வங்கி நாமமாக கொமர்ஷல் வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது. உலகின் முன்னணி சுதந்திரமான வர்த்தக நாம ஆலோசனை சேவை நிறுவனமான பிராண்ட் பினான்ஸ், இலங்கையின் மிகச் சிறந்த பெறுமதி மிக்க உறுதியான வர்த்தக நாமமாக கொமர்ஷல் வங்கியைத் தெரிவு செய்துள்ளது.

இதன் மூலம் கொமர்ஷல் வங்கியின் வர்த்தக இலச்சினை இலங்கையில் சகல பிரிவுகளையும் உள்ளடக்கிய தெரிவில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறி உள்ளது. 2022 ஏப்ரலில் வெளியிடப்பட்டுள்ள 'பிராண்ட் பினான்ஸ் ஸ்ரீ லங்கா 100' என்ற வெளியீட்டின் மூலம் இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

பிராண்ட் பினான்ஸ், கொமர்ஷல் வங்கி இலச்சினையை 46.7 பில்லியன் ரூபாய் பெறுமதியானது என மதிப்பிட்டுள்ளது. இது 2021இல் அதன் பெறுமதியிலும் பார்க்க 7 சதவீதம் அல்லது 3 பில்லியன்கள் அதிகமாகும். வங்கித் துறையில் மிகத் துரிதமாக பெறுமான வளர்ச்சி கண்ட வர்த்தக நாமமாக அது அமைந்துள்ளது. ஏனையவை 3% வளர்ச்சியையே பதிவு செய்துள்ளன.

வர்த்தக முத்திரை உறுதிப்பாட்டுப் பிரிவில் கொமர்ஷல் வங்கியின் வர்த்தக முத்திரை உறுதிப்பாடு (BSI) 86.7 புள்ளியைப் பெற்றுள்ளது. இதற்கு AAA தரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் உயர்தரம் வழங்கப்பட்டுள்ள வர்த்தக இலச்சினையாக இது காணப்படுகின்றது. பெறுபேறுகளின் தொகுப்பில் ஸ்திரம் மிக்க வர்த்தக இலச்சினை எதிர்காலத்தில் மேலும் பெறுமதியை திரட்டக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான எஸ்.ரெங்கநாதன் இது பற்றிக் கூறுகையில், "இன்றைய சூழ்நிலை வர்த்தக நடவடிக்கைகளுக்கு மிகவும் சவால் மிக்க காலப்பகுதியாகும். இவ்வாறான சூழ்நிலைகளில் வளர்ச்சி காணக் கூடிய வர்த்தக முத்திரைகள் தொட்டுணரக் கூடிய வகையில் தமது வாக்குறுதிகளில் வாடிக்கையாளர்களுக்கு பதில் அளிக்கும் வகையில் நாம் காணக் கூடிய விதத்தில் நிலைத்திருக்கக் கூடியவை. இந்த நிலை எப்போதும் கொமர்ஷல் வங்கியின் ஸ்திரப்பாட்டில் இருந்து வந்துள்ளது. எமது வர்த்தக முத்திரை பெறுமானத்தில் ஒவ்வோர் ஊழியரும் வாழ வேண்டும் என நாம் நம்புகின்றோம்" என்று கூறினார்.

கொமர்ஷல் வங்கிக் குழுமத்தின் பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி ஹஸ்ரத் முனசிங்க தெரிவித்துள்ள கருத்தின் படி, நோய்ப்பரவல் காலத்தில் கடுமையான வெளி சூழ்நிலைகளையும் மீறி வர்த்தக முத்திரையை கட்டியெழுப்பும் மூலோபாய செயற்பாடுகளில் வங்கி தொடர்ந்தும் ஈடுபட்டு வந்தது. வங்கியின் இந்த மூலோபாய வர்த்தக முத்திரை செயற்பாடானது, வெறுமனே அதை பார்ப்பதோ அல்லது கேட்பதோ மட்டும் அல்ல. மாறாக, கட்டி எழுப்பல், ஈடுபடல், பிரதான பங்காளிகளோடு அவர்களுக்கு தொடராக பெறுமானங்களை வழங்குவதன் மூலம் உறவுகளைப் பேணல் என்பனவற்றையும் உள்ளடக்கியது என்று தெரிவித்துள்ளார்.

SLT–MOBITEL இனால் கேரகல கிராமத்துக்கு

# புரோட்பான்ட் வசதி

கம்பஹா, கேரகல படைவீரர் கிராமத்தில் மற்றுமொரு வலைக்கோபுரத்தை SLT-MOBITEL அண்மையில் நிறுவியிருந்தது. அதனூடாக இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு அதிவேக இணைய இணைப்புத் தீர்வுகளை வழங்கியிருந்தது. போர் வீரர்கள் அடங்கலாக, கிராமத்தைச் சேர்ந்த ஏனைய குடும்பங்களுக்கு உயர்தரமான அதிவேக 4G LTE இணைப்பை இந்தத் திட்டம் வழங்கும்.

நகர அபிவிருத்தி, கழிவகற்றல் மற்றும் சமூக தூய்மை தொடர்பான இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா மற்றும் SLT-MOBITEL இன் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





தேசத்தை பாதுகாக்கும் வகையில் அளப்பரிய அர்ப்பணிப்பை மேற்கொண்ட இராணுவ வீரர்களுக்காக, இலங்கை இராணுவத்தால் நாடு முழுவதிலும் இராணுவ வீரர் கிராமிய வீடமைப்புத் திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.


கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களின் கல்விசார் தேவைகளை கவனத்தில் கொண்டு, அதற்கு ஆதரவளிக்கும் வகையில் இணைய இணைப்புத் தீர்வுகளை ஏற்படுத்திக் கொடுப்பதை துரிதப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயலாற்றும் SLT-MOBITEL, அதிவேக 4G புரோட்பான்ட், குரல் மற்றும் பல தீர்வுகள் அடங்கலான இணைப்புத் தீர்வுகளை வழங்குகின்றது. கிராமிய பகுதிகளில் டிஜிட்டல் புரட்சியை ஊக்குவிக்கும் வகையிலும், தேசத்தில் நிலவும் டிஜிட்டல் இடைவெளியை நிவர்த்தி செய்யும் வகையிலும் தொலைத்தொடர்பாடல் உட்கட்டமைப்பு மற்றும் இணைப்புத் தீர்வுகளை வழங்குவதில் SLT-MOBITEL தனது அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்துள்ளது.

மேலும், நாடளாவிய ரீதியில் SLT-MOBITEL இனால் சூழல் பேணலில் பங்களிப்பு வழங்கும் நாட்டிலுப்பை மரக் கன்றுகளை நடும் திட்டமும் முன்னெடுக்கப்படுகின்றது. இந்தத் திட்டத்தினூடாக சூழலை மேம்படுத்தவும், இலங்கையின் தாவரங்கள், விலங்குகளின் பரம்பலை பேணுவதில் பங்களிப்பு வழங்கவும் எதிர்பார்க்கின்றது.

யூனியன் அஷ்யூரன்ஸிடமிருந்து

# 'Get Fit' திருப்புமுனை டிஜிட்டல் தீர்வு

வாடிக்கையாளர்கள் தங்கள் காப்புறுதிகளை தாமே நிர்வகிக்க அதிகாரம் அளிக்கும் காப்புறுதித் துறையின் முதலாவது விரிவான டிஜிட்டல் தீர்வான யூனியன் அஷ்யூரன்ஸின் Click life App, வாடிக்கையாளர்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வாழ வழிவகுப்பதன் மூலம் ஒரு படி மேலே செல்கிறது. அற்புதமான fitness அம்சங்களுடன் வரும் இந்தப் புதுமையான App, வாடிக்கையாளர்கள் சேகரித்த loyalty புள்ளிகளின் அடிப்படையில் அவர்களுக்கு மதிப்புமிக்க வாழ்க்கைத்தர வெகுமதிகளையும் வழங்குகிறது.




ஆப்ஸின் தனித்துவமான அம்சம் என்னவென்றால், வாடிக்கையாளர்கள் உடற்பயிற்சி இலக்குகளை நிறைவு செய்வதன் மூலம் கூடுதல் புள்ளிகளையும் அதன் மூலம் அதிக வெகுமதிகளையும் பெற முடியும். செயலியில் உள்ள 'Get Fit' வசதி, ஒருவரின் உடல் செயற்பாடுகளைக் கண்காணிக்க ஒரு Dashboard மற்றும் தினசரி உணவு உட்கொள்ளலைக் கண்காணிக்க, கலோரி பதிவு ஆகியவற்றை உள்ளடக்கியது.

அதிநவீன கலோரி கவுண்டரில் செயற்கை நுண்ணறிவால் இயங்கக்கூடிய உணவுப் படப்பிடிப்பு, உணவுத் தெரிவுக்கான அங்கிகார அமைப்பும் உள்ளது. இது பயனர்கள் தங்கள் உணவின் படங்களை பார்வையிடவும், அவர்களின் கலோரி உட்கொள்ளலைக் கண்காணிக்கவும் உதவுகிறது. பல இலங்கை உணவுகள் உட்பட 900,000 உணவுப் பொருட்களின் தரவுத்தளத்தையும் இது கொண்டுள்ளது.

இந்த முயற்சியின் மூலம், யூனியன் அஷ்யூரன்ஸ், ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வெகுமதி அளிக்கும் வகையில் கலோரி எண்ணிக்கை, உடல் செயற்பாட்டுக் கண்காணிப்பு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் புதுமையான உடற்பயிற்சி தீர்வை அறிமுகப்படுத்தி இந்தத் தொழிற்றுறையில் முதன்மையானதாகத் திகழ்கிறது.

பாகிஸ்தான்

# மூன்றாகப் பிரியும் பாகிஸ்தான்?

“பாகிஸ்தான் மூன்றாகப் பிரியும் வாய்ப்பு உள்ளது” என பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ள கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் இம்ரான்கான் தலைமையிலான ஆட்சி, அண்மையில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தால் கவிழ்ந்தது.

இதையடுத்து, பாகிஸ்தானின் புதிய பிரதமராக பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் ஷபாஸ் ஷெரீப் பதவியேற்றார். இதனையடுத்து, “எனது அரசாங்கத்தை, வெளிநாட்டு சக்தி சதி செய்து, கவிழ்த்து விட்டது. உடனே பொதுத்தேர்தலை நடத்த



வேண்டும்” என்று இம்ரான்கான் வலியுறுத்தி வருகிறார். இந்நிலையில், தனியார் தொலைக்காட்சிக்கு செவ்வி வழங்கிய இம்ரான் கான், “பாகிஸ்தானின் நிர்வாக கட்டமைப்பில் பல பிரச்சினைகள் உள்ளன. நிர்வாகம் சரியான முடிவுகளை எடுக்காவிட்டால், நாடு மோசமான அழிவைச் சந்திக்கும். நாட்டின் இராணுவமே, முதலில் பாதிக்கப்படும்” என்றும் கூறினார்.

மேலும், பாகிஸ்தான் மூன்றாக பிரிந்துவிடும் நிலை ஏற்படும். நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டால், உக்ரேன் நாட்டில் 1990களில் நடந்ததைப் போல, உலக நாடுகளின் வற்புறுத்தல் காரணமாக, பாகிஸ்தானும் தனது அணு ஆயுத பலத்தை இழக்க நேரிடும் எனவும் எச்சரித்தார்.

இந்நிலையில், இம்ரான் கானின் இந்தக் கருத்துக்கு அந்நாட்டின் தலைவர்கள் பலரும் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

எப்.எச்.எஸ்.சி பௌசி கிண்ண தொடரில்

## காலிறுதிக்கு தகுதிபெற்றது சாய்ந்தமருது விளாஸ்டர்

நூருல் ஹுதா உமர்

40 வருடங்கள் பழைமையான சாய்ந்தமருது பிளையிங் கோர்ஸ் விளையாட்டு கழகம் ஏற்பாடு செய்திருந்த கிழக்கு மாகாண 32 முன்னணி கழகங்கள் பங்குபற்றும் பௌசி கிண்ண 20 க்கு 20 கடினபந்து கிரிக்கட் சுற்றுத்தொடரின் காலிறுதியாட்டத்துக்கு சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டுக்கழகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதிக்கான தகுதிக்காண் போட்டியில், சம்மாந்துறை ஈஸ்டர்ன் றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடிய சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டுக்கழகம், முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயித்த 20 ஓவர்களில் 06 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து, 202 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அதிரடியாக துடுப்பெடுத்தாடிய விளாஸ்டர் விளையாட்டுக்கழக அணித்தலைவர் ஆபாக் 42 பந்துகளை எதிர்கொண்டு 73 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டார். மேலும் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய அணியின் உபதலைவர் றிழ்வான் 52 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.







அதனடிப்படையில் 203 எனும் வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சம்மாந்துறை ஈஸ்டர்ன் றோயல் விளையாட்டுக்கழகம் 19 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 124 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

சம்மாந்துறை ஈஸ்டர்ன் றோயல் விளையாட்டுக்கழகம் சார்பில் சிறப்பாக விளையாடிய சாஜித் 42 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டுக்கழகம் சார்பில் சிறப்பாக பந்துவீசிய சஹீல், ஜலூத் ஆகியோர் நான்கு பந்துவீச்சு ஓவர்களை வீசி, தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக விளாஸ்டர் விளையாட்டுக்கழக அணித்தலைவர் ஆபாக் தெரிவு செய்யப்பட்டார்.

அமெரிக்கா



## கர்ப்பத்தில் மீண்டும் ஒரு கர்ப்பம்

பெண்ணொருவர் கர்ப்பமாக இருந்துள்ள நிலையில், மீண்டும் கர்ப்பம் அடைந்துள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த காரா வின்ஹோல்ட் என்ற பெண்ணே இவ்வாறு இருமுறை கர்ப்பம் தரித்துள்ளார்.

ஏற்கெனவே, இதற்கு முன்பாக மூன்று முறை கருக்கலைப்பு செய்துள்ள நிலையில், அவர் கர்ப்பமானதோடு, ஒரு மாதம் கழித்து நடத்தப்பட்ட பரிசோதனையில் அவர் மீண்டும் கர்ப்பமாக இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில், இது குறித்துக் கருத்துத் தெரிவித்த மருத்துவர்கள், “இது தனித்துவமான மருத்துவ நிலை; ‘சூப்பர் பீடேசன்’ என்று அழைக்கப்படுகின்றது. இது முதல் சில நாள்கள் அல்லது வாரங்களுக்குள் நிகழும்” என்றும் தெரிவித்துள்ளனர்.

அப்பெண்ணின் பிரசவத்தின்போது, ஆறு நிமிட வித்தியாசத்தில் இரண்டு குழந்தைகள் பிறந்துள்ளன. இதுகுறித்து அப்பெண் கருத்துத் தெரிவிக்கையில், “என்னுடைய கர்ப்ப காலத்தில் நடந்த அனைத்தும், ஓர் அதிசயம் என்று நான் 100% நம்புகிறேன்” என்று கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியா




## அமைச்சரவையின் புதிய சாதனை

அவுஸ்திரேலியாவில் நேற்று முன்தினம் (01) புதிதாக அமைக்கப்பட்ட அமைச்சரவையில் முதன்முறையாக பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

மே மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் தொழிலாளர் கட்சியின் தலைவர் அந்தோணி அல்பேனிஸ் வெற்றிபெற்ற நிலையில், மே மாதம் 23ஆம்திகதி பிரதமராகப் பொறுப்பேற்றார்.

இந்நிலையில், புதிய அமைச்சரவையில் மொத்தமாக 23 பேர் உள்ளனர். இவர்களில் 10 பெண்கள் இடம்பெற்றுள்ளனர். கடந்த ஆட்சியில் அதிகபட்சமாக 7 பெண்கள் மட்டுமே அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா




வைத்திய சாலையில் துப்பாக்கிச் சூடு:

## 4 பேர் உயிரிழப்பு

அமெரிக்கா, ஒக்லஹோமா மாகாணத்தில் நேற்று முன்தினம் (01) வைத்தியசாலையொன்றில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நால்வர் உயிரிழந்த சம்பவம், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சம்பவ தினத்தன்று குறித்த 5 மாடிக் கட்டட வைத்தியசாலைக்குள் நுழைந்த மர்ம நபர், கண்மூடித்தனமாக அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் தம்பதி உட்பட நால்வர் உயிரிழந்துள்ளதோடு பலர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், குறித்த நபர் மீது நடத்திய பதில் தாக்குதலில் கொலையாளி கொல்லப்பட்டுள்ளார். இந்நிலையில், இச்சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

துருக்கி



## தீப்பற்றி எரியும் நபர் அருகே ‘செல்பி’

தீக்குளித்து தன் உயிரை மாய்க்க முயன்ற நபர் அருகே நின்று, சிலர் ‘செல்பி’ எடுக்க முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

துருக்கியில், இஸ்தான்புல் நகரில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க கலாட்டா கோபுரத்தின் அருகே, நீண்ட நேரமாக அரிவாள், பெட்ரோல் கலனுடன் நபர் ஒருவர் சுற்றித் திரிந்துள்ளார்.

இந்நிலையில், குறித்த நபர் திடீரென தனது உடலில் பெட்ரோலை ஊற்றி, தீயைப் பற்ற வைத்த நிலையில் அங்கிருந்த சிலர், அவருடன் செல்பி எடுக்க முயன்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

எனினும், உடனடியாகச் செயற்பட்ட சிலர், தீ அணைப்பான்களால் தீயை அணைத்து, அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்நிலையில், தீப்பற்றி எரிபவருடன் செல்பி எடுத்த சிலர் குறித்து வெளியான வீடியோ, பெரும் அதிர்வலைகளையும் விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியா

உலகின் மிகப்பெரிய தாவரம்

## நீருக்கு அடியில் கண்டுபிடிப்பு

அவுஸ்திரேலியாவில் நீருக்கடியில் வளரும் உலகின் மிகப்பெரிய தாவரத்தை ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் கண்டுபிடித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் மேற்கு கடற்கரையில் உள்ள ஷார்க் விரிகுடாவில் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத் தாவரம் சுமார் 200 சதுர கி.மீ பரப்பளவில் வளர்ந்து இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.


மேலும், இந்தத் தாவரத்தின் மேற்பரப்பு கிளாஸ்கோ நகரத்தை விடச் சற்றே பெரியது எனவும் மன்ஹாட்டன் தீவை விட மூன்று மடங்கு பெரியது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் இந்தச் செடியை பார்க்கும் போது, அது ஒரு பெரிய கடல் புல்வெளி என்று நம்பியதாகவும் ஆனால், அது ஒரு விதையில் இருந்து வளர்ந்த தாவரம் என அறிவியல் சோதனையில் கண்டறிந்ததாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# அரையிறுதிக்கு முன்னேறினார் நடால்

பிரெஞ்ச் ஓபன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி போட்டியில், சேர்பியாவைச் சேர்ந்த உலக நம்பர் 1 வீரரான ஜோகோவிச்சுடன் (35 வயது) மோதிய ஸ்பெயின் நட்சத்திரம் ரபேல் நடால் (35 வயது), 4 மணி, 12 நிமிடம் கடுமையாகப் போராடி வெற்றிபெற்றுள்ளார்.

இத்தொடரின் அரையிறுதிக்கு அதனூடாக, 15 ஆவது முறையாக முன்னேறியுள்ளார். டென்னிஸ் ரசிகர்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்த இப்போட்டியில், அதிரடியாக விளையாடி புள்ளிகளைக் குவித்த நடால், முதல் செட்டை 6-2 என எளிதில் கைப்பற்றி முன்னிலை பெற்றார். 2 ஆவது செட்டில் ஜோகோவிச் 6-4 என வென்று பதிலடி கொடுக்க சமநிலை ஏற்பட்டது. 3வது செட்டில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய



நடால் 6-2 என வென்று மீண்டும் முன்னிலை பெற்றார். இதைத் தொடர்ந்து, 4வது செட் ஆட்டத்தில் அனல் பறந்தது. ரசிகர்களுக்கு நல்ல விருந்தாக அமைந்த இப்போட்டி 4 மணி, 12 நிமிடங்களுக்கு நீடித்தது.

பிரெஞ்ச் ஓபனில், நடால் இதுவரை 113 போட்டிகளில் 110 வெற்றிகளை பெற்றுள்ளார். ஏற்கெனவே இங்கு 13 முறை சாம்பியன் பட்டம் வென்று மகத்தான சாதனையும் படைத்துள்ளார்.

## வந்தடைந்தது ஆஸி. அணி

இலங்கை கிரிக்கெட் அணிக்கும் அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணிக்கும் இடையிலான கிரிக்கெட் தொடர், இலங்கையில் நடைபெறவிருக்கின்றது.


டி20 போட்டிகள் மூன்று, ஒருநாள் போட்டிகள் ஐந்து, இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இவ்விரு அணிகளும் பங்கேற்கும். முதலாவது டி20 போட்டி, கொழும்பு ஆர். பிரேமதாஸ சர்வதேச விளையாட்டு அரங்கில், ஜூன் 7ஆம் திகதி இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்தப் போட்டிகளில் பங்கேற்பதற்காக, அவுஸ்திரேலியா அணி, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக, நேற்றுமுன்தினம் (01) மாலை நாட்டை வந்தடைந்தது.



## ஓய்வு பெறுகிறார் மரியா

ஆர்ஜென்டினா கால்பந்து அணியின் முன்னணி வீரர்களில் ஒருவர் ஏஞ்சல் டி மரியா. அந்த அணிக்காக 121 சர்வதேச போட்டிகளில் விளையாடி 24 கோல்கள் அடித்துள்ளார்.



கோபா அமெரிக்கா கால்பந்து போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் பிரேசிலை வீழ்த்தி 28 ஆண்டுக்கு பிறகு அந்தக் கிண்ணத்தை ஆர்ஜென்டினா கைப்பற்றியது. இதில் டி மரியாவே, வெற்றிக்குரிய கோலை அடித்தார்.

இந்த நிலையில், 34 வயதான ஏஞ்சல் டி மரியா, கட்டாரில், எதிர்வரும் நவம்பர்-டிசெம்பரில் நடைபெறவிருக்கும் 22ஆவது உலகக் கோப்பை கால்பந்து போட்டியுடன் சர்வதேச கால்பந்து போட்டிக்கு முழுக்கு போட முடிவு செய்துள்ளார்.

“உலக கோப்பை முடிந்ததும் ஓய்வு பெறுவதற்கு அதுவே சரியான தருணம்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸை சேர்ந்த பி.எஸ்.ஜி. கால்பந்து கிளப்புக்காக டி மரியா விளையாடுகிறார். இந்தக் கோடைகால சீசனுடன் அந்தக் கிளப்பில் இருந்து வெளியேறவும் தீர்மானித்துள்ளார். அதன் பிறகு வேறு ஏதாவது கிளப் அணிக்காக ஆடுவாரா என்பது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை என அறியமுடிகின்றது.

## டி20 தொடர்களை நிறுத்தவும்

சர்வதேச இருத்தரப்பு டி20 தொடர்களை ஐசிசி உடனடியாக நிறுத்த வேண்டுமென இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளர் ரவி சாஸ்த்ரி கோரிக்கை விடுத்துள்ளார்.



ஐபிஎல் தொடர்பாக நடைபெற்ற கருத்தரங்கில் ரவி சாஸ்த்ரி, டேனியல் விட்டோரி, ஆகாஷ் சோப்ரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு கருத்துரைத்த ரவி சாஸ்த்ரி, “ஐபிஎல் பெரும் லாபத்தை அளிக்க கூடிய வர்த்தகமாக மாறிவிட்டது” என்றார்.

“ஐபிஎல் போட்டியை ஆண்டுக்கு இரண்டு முறை நடத்த வேண்டும். சர்வதேச இருதரப்பு டி20 தொடர்களை ஐசிசி உடனடியாக நிறுத்த வேண்டும். இருத்தரப்பு டி20 தொடர் தேவையில்லாதவை என்றும் கூறினார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வெள்ளிக்கிழமை, 03 ஜூன் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.